வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.04.2023 சனிக்கிழமை | இதழ் : 114 | பக்கங்கள் : 12




# தந்தையையே வெட்டிக்கொன்ற இரு மகன்களும், நண்பரும் கைது!



## நேற்று நடுநிசி வேளை மிருசுவிலில் கொடூரம்

தென்மராட்சி, ஏப். 01

தென்மராட்சியில் தந்தையையே வெட்டிக் கொன்றனர் என்ற சந்தேகத்தில் 18, 19 வயதான இரு மகன்களையும் அவர்களின் 19 வயதேயான நண்பரையும் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், கொலை தொடர்பில் முறைப்பாடு கிடைத்த 4 மணி நேரத்திலேயே பொலிஸார் துப்புத்துலக்கி சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தென்மராட்சி - மிருசுவில் - கரம்பகத்தில் நேற்று நடுச்சாமம் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவசோதி சிவகுமார் (வயது 43) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மிருசுவில் - கரம்பகத்தில் நேற்று காலை தோட்டக் காணியின் கொட்டிலில்வெட்டுக் காயங்க ளுடன் சிவசோதி சிவகுமாரின் 11

# குடியியல், அரசியல் உரிமைகள் இலங்கையில் மீறப்படுகின்றன!

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவை சாடல்! அரசுக்கு 60 பரிந்துரைகளையும் செய்தது!


ஜெனிவா, ஏப். 01

**இலங்கையில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் கடுமையாக மீறப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு இலங்கை அரசாங்கத்திடம் 60 இற்கும் மேற்பட்ட பரிந்துரைகளையும் செய்துள்ளது.**

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு குறுகிய வரையறையை உள்ளடக்கிய சட்டம் ஒன்றே அவசியம் என்பது உள்ளிட்ட இந்தப் பரிந்துரைகளை மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு, மனித உரிமைகள் மேம்பாட்டு மையம் ஆகியவை வரவேற்றுள்ளன.

அத்துடன், ஐக்கிய நாடுகள் அமைப்பால் அடையாளம் காணப்பட்ட 11

# தனியே தன்னந்தனியே...!



மறைந்த முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடல் நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்துக்கு அஞ்சலிக்காக கொண்டுவரப்பட்ட சமயம் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தனியாக அமர்ந்திருந்தார்...!

# புதிய பயங்கரவாத சட்டம் மக்கள் குழம்ப வேண்டாம்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கிளிநொச்சி, ஏப். 01

"புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக மக்கள் குழப்பமடைய தேவையில்லை" 11

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இருந்ததைவிட 10 மடங்கு ஆபத்து!

## சுட்டிக்காட்டுகின்றார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஏப். 01

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டமூலமானது, இருந்த சட்டத்தைவிட 10 மடங்கு பயங்கரமானது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலம் வர்த்தமானியில் வெளியாகியுள்ளது. இது பயங்கரமானது. 11

# கோட்டாவின் வீட்டைச் சுற்றி 3000 பாதுகாப்புப் படையினர்?

கொழும்பு, ஏப். 01

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கு முன்பாக மேலதிகப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அரகலய போராட்டத்தின் ஓராண்டு நிறைவையொட்டி அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் களால் மிரிஹான ஜூபிலி கனுவ சந்தியில் கொண்டாட்ட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த நிகழ்வு போராட்டமாக மாறாமல் இருப்பதற்காக பாதுகாப்பு வழங்குவதற்காகவே 1500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 3000 பாதுகாப்பு படையினர் அடங்கிய விசேட அதிரடிப்படையினர் மிரிஹான தலைமையகப் பொலிஸூக்கு அழைக்கப்பட்டுள்ளதாக 11

# பொது நிர்வாக அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்

கொழும்பு, ஏப். 01

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் புதிய செயலாளராக கே. டி.என். ரஞ்சித் அசோகவை நியமிப்பதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் 11

# மொட்டுக் கட்சியின் வியூகங்களை எந்த கட்சியும் முறியடிக்கமுடியாது!

## திடமாகக் கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 01

மொட்டுக் கட்சியின் வியூகங்களை எந்தக் கட்சியாலும் முறியடிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவே அடுத்த தேர்தலில் 11

## தமிழரசு தலைமை விவகாரம்:

# சுமந்திரன் சொன்னதை காப்பாற்ற வேண்டும்!

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 01

தமிழரசு கட்சியின் தலைமையை ஏற்பதற்கு தனது பூரண ஆதரவு இருக்கும் என்று சுமந்திரன் எம். பி. கூறியிருந்தார். நான் அவருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினேன். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியில் நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபம் குறித்து எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்து கலாசார திணைக்களத்தால் கட்டிமுடிக்கப்பட்ட அந்த நிலையத்தை யாழ்ப்பாண மாநகர சபையிடம் நிர்வகிக்க கொடுக்கப்பட்டிருந்தது என்று அந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அது அவர்களாகவே மாநகர சபையிடம் கொடுத்தது அல்ல என்றும் அப்போது இந்து சமய விவகார அமைச்சராக இருந்த 'சொல்லின்செல்வர்' செ. இராசதுரையிடம் சென்று இரந்து பேசி, அதனை யாழ்ப்பாண மாநகர சபையின் பொறுப்பில் எடுக்க முழு முயற்சியும் செய்தவர் இப்போதும் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறார் எனவும் விசயம் தெரிந்த ஒருவர் சொன்னார்.

அவர் வேறு யாருமல்ல, யாழ்ப்பாண மாநகர சபையில் கணக்காளராக, ஆணையாளராக பின்னர் விசேட ஆணையாளராக இருந்த சீ. வீ. கே. சிவஞானம் ஐயாதான். வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர்.

விசயம் தெரிந்த பின்னர் அவரிடமும் பேசினேன். அவர் அதனை ஊர்ஜிதம் செய்த பின்னர் சொன்னார், இப்போதும் தான் பெற்றதுபோல அதனைப் பேசி தமது பொறுப்பில் எடுக்காமல் எடுத்ததெல்லாவற்றையும் அரசியலாக்குவது சரியல்ல என்றார்.

இனி இன்றைய பத்தியில் சொல்ல வந்ததைப் பார்ப்போம்.

அடுத்த ஆண்டுதான் தேர்தல் நடைபெறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்து விட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தத் தேர்தல் மூலம் மக்கள் தமக்கு விரும்பிய ஆட்சியை அமைக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

அதன் மூலம் இந்த நாட்டில் அடுத்து நடக்கவிருப்பது ஜனாதிபதி தேர்தல்தான் என்பது அநேகமாக உறுதியாகியிருக்கின்றது.

ஜனாதிபதி ரணில், அண்மையில் தான் சந்தித்த தமிழ் தேசியக் கட்சி ஒன்றின் தலைவரிடமும் இந்த விடயத்தை நாசூக்காக சொல்லி, உங்கள் ஆதரவு எனக்குத்தானே என்றும் கேட்டிருந்தாராம்.

பின்னர் அவர் அரசாங்கத்திலுள்ள சில தமிழ் தலைவர்களுடனும் சிறுபான்மையினரின் வாக்குகளை இலக்கு வைத்து பேச்சு நடத்தியதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

ரணில் விக்கிரமசிங்க, அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு இப்படி தயாராகி வருகின்ற அதேவேளை, அந்தத் தேர்தலுக்கு முன்னர் தனது எதிரணி வேட்பாளர்களை பலவீனப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார் என்பதை அவரது நடவடிக்கைகள் உணர்த்துகின்றன. அதனால் தான் பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள முக்கிய 'தலைகளை' தன்பக்கம் வளைத்துப்போட தீவிர முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்.

அவ்வாறு செய்வதன்மூலம் சஜித்தை உளரீதியாகவும் பயமுறுத்தலாம் என்று அவர் கணக்குப்போடுவது வெளிச்சமாகி வருகின்றது.

இதுவரை உறுதியாக முடிவெடுக்க முடியாத தலைவர் என்று பெயரெடுத்துள்ள சஜித், ஏற்கனவே பாராளுமன்றலில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து பின்வாங்கியதையும் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் இவ்வாறு காய்நகர்த்தி தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்க, தெற்கில் மற்றுமொரு வரும் கோட்டாபய பாணியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்.

கோட்டாவின் வெற்றிக்கு பின்னால் பணியாற்றிய மிக முக்கியமானவர்களில் அவரும் ஒருவர். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்று ஊடகத்துறையில் ஜாம்பவானான அவர், கோட்டாபய வெற்றி பெற்றபின்னர் அவரின் அனைத்து விடயங்களிலும் தலையை நுழைத்தவர். கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களை அடையாளம் காணுவதற்காக கோட்டாபய பதவிக்கு வந்ததும் ஒரு குழுவை நியமித்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் இருந்தவர் அவர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவெடுத்ததும், கோட்டா எவ்வாறு தெற்கில் தனக்கென ஒரு நெற்வேர்க்கை உருவாக்கி பிரசாரத்தை நடத்தினாரோ அதே போல இவரும் தற்போது தீவிர பிரசாரத்தில் குதித்திருக்கிறார்.

தொலைக்காட்சியை ஆரம்பித்து மிகக்குறுகிய காலத்தில் அதனை சிங்கள தொலைக்காட்சிகளில் முதன்மை ஸ்தானத்துக்கு உயர்த்தியவர். பல்வேறு வர்த்தக துறைகளிலும் ஈடுபட்டுவரும் பிரபல தொழிலதிபரான அவர் ஒரு சட்டத்தரணியும்கூட. இலங்கைக்கு வேண்டிய நாடு ஒன்றின் ஆசீர்வாதமும் இவருக்கு இருப்பதால் விமல் வீரவன்ஸ போன்றவர்களும் அவர் பின்னால் அணிதிரளலாம் என்கின்றன கொழும்புச் செயதிகள்.

மலிந்தால் சந்தைக்கு வரும் என்பதுபோல, அவர் போட்டியிடுகின்ற சங்கதியும் விரைவில் வெளிச்சத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம்.!

**- ஊர்க்குருவி**

# தந்தை செல்வா 125ஆவது பிறந்த தினம் தமிழரசு கட்சி தனி அணிகளாக அஞ்சலி!




யாழ்ப்பாணம், ஏப். 01

தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நேற்று நடைபெற்றது.

தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் நடந்த அஞ்சலியில் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் ஜெபநேசன், தமிழரசு கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா, யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் இ. ஆனல்ட் ஆகியோர் உள்ளிட்ட தமிழரசு கட்சி யினர் பங்கெடுத்து அஞ்சலி செலுத்தினர்.

காலை 9.30 மணிக்கு இந்த அஞ்சலி நிகழ்வு நிறைவடைந்த பின்னர் இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த உப தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே சிவஞானம், மூத்த பத்திரிகையாளரும் தமிழரசு கட்சியின் யாழ். மாநகர வேட்பாளருமான ந. வித்தியாதரன், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ச. சுகிர்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியினர் தனியாகவும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அண்மைக்காலமாக தமிழரசுக் கட்சிக்குள் கோஷ்டி பூசல்கள் அதிகரித்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், நேற்றைய தினம் தந்தை செல்வாவின் பிறந்த நாளிலும் இது எதிரொலித்தமையை அனைவராலும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரியும் தந்தை செல்வா சதுக்கத்தில் தனியாக அஞ்சலி செலுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பயங்கரவாத எதிர்ப்பு புதிய சட்டம் விஷம்!

## ஐக்கிய மக்கள் சக்கதி

கொழும்பு, ஏப். 01

பயங்கரவாத எதிர்ப்பு புதிய சட்டமூலத்தில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளுக்குத் தடை விதிக்கும் அதிகாரம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட் டுள்ளதன் மூலம் நாட்டை பொலிஸ் இராச்சியமாக மாற்றும் ஆபத்து உள்ளது. இதனால் புதிய சட்டமூலம் விஷம் கலந்த ஐஸ்கிறீம் ஆக இருக்குமா என்பதை கவனமாக அலசி ஆராய வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி மூலம் வெளிப்படுத்தி இருக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதத்தை தடுப்பதற்கான புதிய சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. தற்போது அமுலிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டமூலத்திற்கு சர்வதேச ஜனநாயக அமைப்புகள் மற்றும் சர்வதேச நாடுகளிடம் இருந்து வந்த கடுமையான எதிர்ப்பின் காரணமாகவே புதிய சட்டமூலத்தை கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

தேர்தல் மூலம் மக்களின் கருத்து வெளிப்படுவதற்கான வழிகளை மூடுவதற்கு பல சூழ்ச்சிகள் நடத்தப்படும் தற்போதைய சூழலில் தேர்தலுக்கு அப்பால் அரசியலமைப்பு பிரகாரம் மக்களின் கருத்துக்கள் வெளிப்படும் ஏனைய வழிகளையும் புதிய சட்டமூலத்தின் ஊடாக மூடுவதற்கு முனைவதாகவே இந்த சட்டமூல சரத்துகளை ஆராயும் போது தெட்டத் தெளிவாக புலப்படுகிறது.

அத்துடன் அன்று முதல் இன்று வரை பல தடவைகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை தனது குறுகிய அரசியல் இலாபத்திற்காக மாத்திரமே பயன்படுத்தியுள்ளனர்.

இந்த சட்டமூலத்தினால் பயங்கரவாத சந்தேக நபர்கள் மாத்திரமின்றி ஊடகவியலா ளர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்திற்கு எதிரான விமர்சன ரீதியான கருத்துக்களை முடக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவசரகால சட்டத்தை பிறப்பித்து நினைத்த போக்கில் ஆட்சி நடத்த முடியும்.

தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள். பொதுக் கூட்டங்கள். பேரணிகளை தடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் புதிய சட்டமூலத்தில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளுக்குத் தடை விதிக்கும் அதிகாரம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டுள்ளது.இந்த ஷரத்து நாட்டை பொலிஸ் இராஜ்ஜியமாக மாற்றும் ஆபத்து உள்ளது.இது மிகவும் பாரதூரமானதாகும்

(ஐ)

# சொற்பொழிவு

யாழ்பாணம், ஏப். 01

நல்லூர் வடக்கு ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பெருந்திருவிழாவின் ஆரம்ப நாளான இன்று தொடக்கம் முதல் 5 நாட்களும் தினமும் இரவு 8 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சிறப்புச் சொற்பொழிவில் இன்றைய தினம் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் 'விநாயகர் திருவுருவம் உணர்ந்தும் தத்துவம்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. சொற்பொழிவின் நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 01

நல்லூர், சட்டநாதர் வீதியிலமைந்த யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்.

பி. ப. 4.30 மணி: வீணை இசை - திருநெல்வேலி அனுராகம் கவின்கலை நிலையம்.

மாலை 5.40 மணி: பாட்டு - ரஜீவன் சுரசாகித்தியன், வயலின் - கா. குகபரன், மிருதங்கம் - எஸ். கமலதாஸ், கெஞ்சிரா - ஞா. வசந்த்

மாலை 6.40 மணி: வில்லுப் பாட்டு - 'திருநீலகண்டர் சரிதம்' அளவையூர் கலைவாணி வில்லிசைக் குழு (ஐ)

ஈழநாடு
Eelanadu
01.04.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இனப் பிரச்னைக்கான தீர்வு?

பொருளாதார பிரச்னையிலிருந்து இனப்பிரச்னைக்கான தீர்வை பிரித்து நோக்க முடியாதென்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றார். வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினால், பொருளாதார உதவிகளை வழங்கினால் மட்டும் போது மென்று கூறுவது சரியானதொரு கருத்தல்ல. நாட்டை நேசிப்பவர்கள் பேராடி யாவது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிடுகின்றார். ரணில் விக்கிரமசிங்கவும் 13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். அதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் பேசியிருந்தார்.

அரசமைப்பிலுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்த முடியாதவொரு நாட்டில் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாமென்று கூறுவது நகைச்சுவைக்கு உரியதாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிக்கைகள் இருந்தாலும் அதே வேளை, அதனை அமுல்படுத்தக் கூடாதென்று வாதிடும் குரல்களும் இல்லாமலில்லை. சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் தென்பகுதி கடும்போக்காளர்களை பகிரங்கமாக எதிர்த்து இதுவரையில் தீர்மானங்களை முன்னெடுத்ததில்லை.

சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் அவர் சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சித்திருந்தார். ஆனால், அது நிறைவேறவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்வதற்கான அரசியல் தீர்மானங்களை சந்திரிகா எடுத்திருந்தார் என்பது உண்மைதான். இன்று நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில், இனப் பிரச்னைக்கான தீர்வை காண்பது அவசியமென்று ரணில் கூறுகின்றார். ஆனால், அவர் கூறுவதை நடைமுறைப்படுத்த அவர் துணிகரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பாரா?

இவ்வாறானதொரு சந்தேகம் தமிழர் பக்கத்தில் இருப்பதற்கு நியாயமுண்டு. ஏனெனில், கடந்த 35 வருடங்களாக அரசமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. இந்தப் பின்புலத்தில், இனியும் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுமா என்பதில் சந்தேகமுண்டு. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாகக்கூறி காலத்தை மேலும் இழுத்தடிக்கவும் முயற்சிக்கலாமென்னும் சந்தேகம் உண்டு.

13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான இறுதி அரசியல் தீர்வல்ல என்பதே, அனைத்து கட்சிகளினதும் நிலைப்பாடாக இருக்கின்றது. ஆனாலும் அதனை தாண்டிச் செல்வதாயின் முதலில் அதனை அமுல்படுத்துவதிலிருந்துதான் பயணிக்க வேண்டியிருக்கின்றது. 13ஆவது திருத்தச் சடத்தை தாண்டிய அரசியல் தீர்வொன்றை காண வேண்டுமாயின், அது புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவருவதன் ஊடாகவே மட்டுமே சாத்தியப்படும். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் அவ்வாறனதோர் அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் வெற்றிபெறமுடியுமென்று கூட்டமைப்பு நம்பியது. குறிப்பாக, சம்பந்தனும் சுமந்திரனும் அந்த முயற்சியின்மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். இறுதியில் எதுவும் நடைபெறவில்லை. இந்தப் பின்புலத்தில், மீண்டுமோர் அரசியல் யாப்பு முயற்சியில் ஈடுபட்டால் மீண்டும் முன்னைய விடயங்கள்தான் நிகழும். மீண்டும் காலமே விரயமாகும். இந்த யதார்தங்களைக் கருத்தில் கொண்டு சிந்திக்கும்போது தான், 13ஆவது திருத்தச்சட்டம் ஒரு தவிர்க்க முடியாத அரசியல் யதார்த்தமாக இருக்கின்றது.

# இன்று பவள விழா காணும் பல்துறை ஆளுமை மு. நித்தியானந்தன்

## உலக பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர்

'தினமணி ஏ. என். சிவராமன்' என்று, சென்னையிலிருந்து வெளியாகும் இந்திய தேசிய தினசரி 'தினமணி'க்கு என்றும் ஓர் அணியாகுபவர் அதன் ஆசிரியராகவிருந்த ஏ. என். சிவராமன். 'சிக்கல் பிக்கலான பொருளாதார விவகாரங்களையெல்லாம்கூட எல்லோரும் எளிதில் விளங்கிக்கொள்ளும் விதமாக, வெகுலாவகமாக தமிழில் மொழிபெயர்த்துவிடும் அபூர்வ ஆற்றல்மிக்கவர் ஏ. என். சிவராமன்' என்று எழுதப்பட்ட ஒரு குறிப்பு, என்னுள் ஆழமாக பதிந்த ஒன்று. அந்த கூற்றின் தாத்பரியத்தை 'நாழிகை' சஞ்சிகையை நடாத்திய காலத்தில், அநுபவத்தில் நான் கண்டேன். ஆனால், அந்த கூற்று, சிவராமனைப் பற்றியதாக மட்டும் என்னில் நிலைக்கவில்லை. அதனை எழுதியவரையும் இணைத்துத்தான் என்னுள் அது எப்போதும் தெரிகிறது. "சலசல சலசல இரட்டைக் கிளவி, தகதக தகதக இரட்டைக் கிளவி உண்டெல்லோ தமிழில் உண்டெல்லோ..." - இப்படித்தான் தெரிகிறது.

'சிக்கல் பிக்கலான' பொருளாதாரவியலை, இலக்கியம் நயம்போல பல்கலைக்கழக மாணர்வர்களுக்கு சுவையோடு ஊட்டி, விசித்திரம் படைத்த ஒருவர் அவர். யாழ்ப்பாண பல்கலைக்கழகம், அது ஆரம்பிக்கப்பட்ட அப்பொற்காலத்தில், அப்படி ஒரு வாய்ப்பையும் பெற்றிருந்தது. எனினும், மாணவர்களின் எதிர்காலக் கரிசனையை, இனத்தின் மீதான அவரின் கரிசனை விஞ்சியதில், பல்கலைக்கழகம் அவரை இழந்தது.

எதிர்பார்த்த விதத்திலன்றி, நிலைப்பாடுகள் நிலைமாறி, இலங்கைத் தமிழினம் வேரறுந்து, புலம்பெயர் தமிழினமொன்றாக முளைவிட்டபோது, அவசியமாகிய அதன் அடையாளப் பேணல், பின்னர் அவரின் அக்கறையானது. கல்வி, கலை, மொழி, மதம், இலக்கியம், அரசியல் என்று இவை சார்ந்த அனைத்துத் துறைகளும் ஒரு பல்கலைக்கழக தேவையாக உணரப்பட்டபோது, அந்த திறந்த உலக பல்கலைக்கழகத்தில், இவை அனைத்திலும் எந்த சிக்கல் பிக்கலுமின்றி, எல்லோருக்குமே அறிவும், தெளிவும், ஆர்வமும் ஊட்டிவிடும் பேராசிரியராக அவர் வடிவம்பெற்றார்.

இலக்கிய சந்திப்புகள், பல்துறைக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பல்துறை நிகழ்ச்சிகள், பல்துறை விமர்சனங்கள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் என்பவற்றின்வழி, இவரின் மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட இக் காலப்பகுதி, இப் புலம்பெயர் தமிழினம் செம்மைப்பட பேருதவியாகியிருக்கிறது. தனிப்பட்ட பலரின் இத் துறைகள்சார் மேம்பாட்டுக்கு அவரின் இக் காலம் உதவியாகியிருக்கிறது.

'சிக்கல் பிக்கலாக' உணரும் நேரங்களில், எந்நேரமானாலும் எதுபற்றியானாலும், ஒரு



தொலைபேசி அழைப்பில் உடனே அதற்கு ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆம், மு. நித்தியானந்தன். அவர்தான், சிக்கல் பிக்கல் இன்றி, ஏ. என். சிவராமனுடன் என்னில் 'இரட்டைக் கிளவி'யானவர். அரை நூற்றாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொடங்கிய நாள்களில், 'ஈழநாடு' பத்திரிகைவழி ஏற்பட்ட அறிமுகம், லண்டனில் ஓர் உள்வட்ட நட்பாய், மூன்று தசாப்தங்களுக்குமேல், குடும்ப அந்நியோன்யத்துடன் நிறைகிறது.

ஏரிக்கரை நிறுவனத்தின் 'தினகரன்' பத்திரிகையில் கைலாசபதி ஆசிரியராக விருந்தபோது, அவருடன் 'தினகரன்' ஆசிரியபகுதியில் இணைந்திருந்த மலையகத்தின் இரண்டாம் தலைமுறைப் பல்கலைக்கழக பட்டதாரியான மு. நித்தியானந்தன், கைலாசபதி, யாழ். பல்கலைக்கழக வளாகத்தின் முதல் தலைவரானபோது, அங்கு பொருளாதார கற்கைக்கான ஓர் இளம் விரிவுரையாளராக இணைந்தார். அவ்வேளையில், இலங்கைத் தமிழர் அரசியலில் தலைப்படத் தொடங்கிய அரசியல் மாற்றம், அவரின் வாழ்வில் இன்னோர் அத்தியாயத்தைச் சமைத்தது. அது, அந்த அரசியல் வரலாற்றிலும் எழுதப்பட்டது. அதை விடுத்து நோக்கினால், மு. நித்தியானந்தன் தன்னுடைய கல்வித் துறையில் தன்னை இன்னமும் மேம்படுத்தி, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர் இருக்கையையும் நிச்சயம் அலங்கரித்து, ஓய்வுபெற்றிருப்பார்.

அதனாலென்ன, புலம்பெயர் உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்புநிறை வாழ்நாள் பேராசிரியர் அவர். ஒன்றைச் சொல்வதானால், லண்டனின் 'தீபம்' தொலைக்காட்சியில் ஒருமணி நேரம் அவர் ஆற்றிய தொடர் புத்தக விமர்சனங்கள், ஐரோப்பிய நாடுகள் எங்குமே ஒளியூட்டிய ஒரு பல்கலைக்கழ தொடர் விரிவுரை. நூல்களின் அநாயாசமான தேடல், அதி வேகமான வாசிப்புத் திறன், தெளிவான கிரகிப்பு, அபரிமிதமான நினைவாற்றல், கச்சிதமும் நேர்த்தியுமான பரிமாறல் - இது ஓர் அபார திறன்.

- மாலி

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 01 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 18
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். புதுவேலை கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மிதுனம்**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மறதியால் விலை உயர்ந்த பொருட்களை இழக்க நேரிடும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**துலாம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பொறுப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உயரதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# தமிழகத்தில் பொதுமக்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை!

## பாரதிய ஜனதா கட்சி குற்றச்சாட்டு

தமிழகத்தில் பொதுமக்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், விழுப்புரத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் படம் பொறித்த உடை அணிந்த தி. மு. க. ரௌடிகள், பட்டப்பகலில் சுப்பர் மார்க்கெட்டில் புகுந்து இப்ராஹிம் ராஜா என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர்.

இன்னொரு கடையிலும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். ஆனால்,



சட்டப்பேரவையில் குடும்பச் சண்டை என்று முதலமைச்சர் விளக்கம் கொடுத்திருக்கிறார். குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்காமல், ஒவ்வொரு குற்றச்சம்பவங்களும் குடும்பச் சண்டை என்ற அளவில் குறைத்துக் காட்டப்பட்டு வருகிறது.

ஆட்சியில் உள்ள மிதப்பில் தொடர்ந்து தி. மு. கவினர் ஈடுபடும் கொலை உள்ளிட்ட குற்றங்களை குடும்பச்சண்டை என்று முதலமைச்சர் கடந்து செல்ல முடியாது. பொதுமக்களுக்கு எந்தவித பாதுகாப்புமில்லாமல், சீர்குலைந்து கிடக்கும் சட்டம் ஒழுங்கில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், கட்டுப்பாடின்றி அராஜகங்கள் செய்து வரும் தி. மு. க. கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்தியும் வைக்க வேண்டும்- என்றுள்ளது.

(ஐ)

# ராகுல் காந்தி தகுதி நீக்கம் முதலமைச்சர் ஆலோசனை!

சென்னை, ஏப். 01

ராகுல் காந்தி தகுதி நீக்கம் தொடர்பாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆலோசனை நடத்தவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அவதூறு வழக்கில், ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால், பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதற்கு, நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், எம்.பி., பதவியில் இருந்து ராகுல் காந்தி தகுதி நீக்கம் தொடர்பாக, கூட்டணிக் கட்சி தலைவர்களுடன் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆலோசனை நடத்த திட்டமிட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# கொரோனா பாதிப்பு தமிழகத்தில் உயர்வு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

சென்னை, ஏப். 01

தமிழகத்தில் தினசரி கொரோனா பாதிப்பு 100ஐ கடந்துள்ளது. எனவே, கொரோனா விதிமுறைகளை பொதுமக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் ஒமைக்ரான் உருமாற்ற வைரஸின் தாக்கம் மீண்டும் தொடங்கியுள்ளது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற சர்வதேச விமான நிலையங்களில் கடந்த மாதம் வரை வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளில் சுமார் 2 சதவீதம் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்தபோது, சராசரியாக 2-3 நாட்களுக்கு ஒருமுறை ஒருவருக்கு நோய் தொற்று கண்டறியப்பட்டது. தற்போது, தினமும் 8-10 பேருக்கு தொற்று கண்டறியப்படுகிறது.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை பூச்சியத்தை நெருங்கி வந்த நிலையில், தற்போது தினசரி பாதிப்பு 100ஐ கடந்துள்ளது. ஆனால், ஒரே பகுதியில் பலரையும் பாதிக்கிற கொத்து பரவல் இல்லை என்பது ஆறுதல். இது மிதமான பாதிப்பை ஏற்படுத்தும் தொற்றாக இருப்பதால், மக்கள் அச்சப்பட வேண்டாம். ஆனாலும், கொரோனா விதிமுறைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# ஜெயலலிதாவின் அண்ணன் எனக்கூறி சொத்தில் பங்கு கோரி ஒருவர் வழக்கு!

சென்னை, ஏப். 01

ஜெயலலிதாவின் அண்ணன் என்றுகூறி, அவரின் சொத்தில் பங்கு கேட்டு பெங்களூரை சேர்ந்த 83 வயது முதியவர் தாக்கல் செய்திருந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துகளுக்கு சட்டப்படியான வாரிசுகள் என அவரின் அண்ணன் மகள் ஜெ. தீபா, மகன்ஜெ. தீபக் ஆகியோரை அறிவித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்நிலையில், ஜெயலலிதாவின் சகோதரர் என்று கூறி, பெங்களூருவைச் சேர்ந்த என். ஜி. வாசுதேவன் (83) சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அவரது மனுவில் கூறியதாவது:

எனது தந்தை ஆர். ஜெயராமுக்கு இரு மனைவிகள். முதல் மனைவி ஜெயம்மாவுக்கு நான் ஒரே மகன். இரண்டாவது மனைவி வேதவல்லிக்கு ஜெயக்குமார், ஜெயலலிதா என இருவர் பிறந்தனர். இந்த வகையில் ஜெயக்குமாரும், ஜெயலலிதாவும் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதர, சகோதரி ஆவார்கள். 1950இல் எனது தந்தையிடம் ஜீவனாம்சம் கோரி மைசூர் நீதிமன்றத்தில் எனது அம்மா ஜெயம்மா தொடர்ந்த வழக்கில் வேதவல்லி, ஜெயக்குமார், ஜெயலலிதா ஆகியோர் எதிர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஆனால், அந்த வழக்கு சமரசமாகி விட்டது. ஜெயலலிதாவின் அண்ணன் என்ற முறையில் நான்தான் நேரடி வாரிசு. எனவே, ஜெயலலிதாவின் சொத்துகளில் 50 சதவீதத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீபா, தீபக் ஆகியோருக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரிஇருந்தார்.

நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரிக்க நீதிமன்றம் ஏற்றுள்ளது.

# மருத்துவர்கள் இன்மையால் முல்லை., அநுராதபுரம் சிறுவர் பிரிவுகள் மூடல்!

கொழும்பு, ஏப். 01

**முல்லைத்தீவு பொது மருத்துவமனை, அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் சிறுவர் சிகிச்சை பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளில் பணியாற்றிய விசேட மருத்துவர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றமையால் இவை மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.**

அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கையால் மாதாந்தம் சுமார் 50 மருத்துவர்கள் வெளிநாடு செல்வதற்காக விண்ணப்பிக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், துரதிர்ஷ்டவசமாக அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் சிறுவர் பிரிவு மூடப்பட்டுள்ளது. குறித்த பிரிவின் விசேட மருத்தவர்கள் வெளிநாடு சென்றமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த 6 மாதங்களுக்கு முன்னரே இவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் என்று நாம் எதிர்வு கூறியிருந்தோம்.

அதிகாரிகளிடமும், மக்களிடமும் நாம் இது தொடர்பில் தெரிவித்திருந்தோம். எனினும், எவருமே அவதானம் செலுத்தாமையின் பிரதிபலனே இதுவாகும். 4 விசேட மருத்துவ நிபுணர்கள் மாத்திரம் இருந்த மருத்துவமனையில் அவர்கள் நால்வருமே வெளிநாடு செல்லும் வரை அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்?

இந்தப் பிரச்னைகளுக்கான மாற்று வழி குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விரிவானதோர் அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளோம். அநுராதபுரம் மாத்திரமின்றி முல்லைத்தீவு மருத்துவமனையிலும் சிறுவர் பிரிவு மூடப்பட்டுள்ளது. இரு விசேட மருததுவ நிபுணர்கள் பணியாற்றிய இடத்தில் தற்போது ஒருவர் மாத்திரமே உள்ளார். 24 மணித்தியாலமும் ஒருவரால் மாத்திரம் பணியாற்ற முடியாது.

கடந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 700 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். தற்போதும் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக மாதாந்தம் 40 - 50 விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட மருத்துவர்கள் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கும் நிலைமையே காணப்படுகிறது. இதே நிலைமை தொடரும் பட்சத்தில் நோயாளர்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும் - என்றார்.

(ஐ)

## சகோதரன், சிறியதந்தையால் 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்!

### 4 ஆண்டுகள் தொடர்ந்த துன்புறுத்தல்

வவுனியா, ஏப். 01

10 வயது சிறுமி ஒருவரை கடந்த 4 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினர் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் சகோதரன் மற்றும் சிறிய தந்தை உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற இந்தத் துன்பியல் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மாணவி வவுனியா நகர்ப்புற பாடசாலை ஒன்றில் 5ஆம் தரத்தில் கல்வி கற்று வருகின்றார். இவர் கடந்த புதன்கிழமை சக மாணவிக்கு தனக்கு வீட்டில் நடக்கும் கொடுமை, பாலியல் துன்புறுத்தல்களைக் கூறி அழுதுள்ளார். இதனையடுத்து அந்த மாணவி குறித்த விடயத்தை தமது வகுப்பாசிரியரிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆசிரியர் சம்பந்தப்பட்ட விசாரித்து அறிந்து, உடனடியாக, வவுனியா மாவட்ட செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை பிரிவுக்கு தெரியப்படுத்தியுள்ளார். அவர்கள் வவுனியா பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணையில், 10 வயது சிறுமியை கடந்த 4 வருடங்களாக தாயின் இரண்டாவது கணவரான (சிறிய தந்தை) 32 வயது நபர், சிறுமியின் சகோதரனான 16 வயது சிறுவன், வைரவப்புளியங்குளத்தை சேர்ந்த சிறுமியின் உறவினரான 53 வயது நபர் ஆகியோர் பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்தது தெரிய வந்தது.

இதையடுத்து மூவரையும் கைது செய்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன், சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நல்லூரில் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஏப். 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் நல்லை ஆதீனத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே உரிய தீர்வு வழங்க வேண்டும் போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஐ)

## குப்பி விளக்கு சரிந்ததால் பற்றிய தீயில் குழந்தை பலி!

முல்லைத்தீவு, ஏப். 01

விசுவமடு பகுதியில் குப்பி விளக்கு சரிந்து விழுந்து தீப் பற்றியதில் சிக்கிய 6 மாத குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

அதே இடத்தைச் சேர்ந்த கஜீபன் பிரசாத் எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

கடந்த 23 ஆம் திகதி இரவு தாயுடன் குழந்தை உறங்கிக் கொண்டிருந்த வேளை வீட்டின் வெளியே யானைகளின் சத்தம் கேட்டதால், தாய் வீட்டின் வெளியே சென்று பார்த்துள்ளார். அந்தச் சமயம் குழந்தை படுக்கையில் உருண்டு, குப்பி விளக்கை தட்டியுள்ளது.

இதனால், பற்றிய தீயில் குழந்தை சிக்கி எரிகாயங்களுக்கு உள்ளானது. தாயார் தீயை அணைத்து குழந்தையை முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்ப்பித்தார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துமவனைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

## வடமராட்சி கிழக்கில் சிவலிங்கம் பிரதிஷ்டை!



வடமராட்சி, ஏப். 01

வடமராட்சி கிழக்கு - குடத்தனை கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு சிவலிங்கம் ஒன்று இனந்தெரி யாதோரால் வைக்கப்பட்டது.

இந்த சிவலிங்கம் பொற்பதி கடற்கரையிலிருந்து கிழக்கு பக்கமாக சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் கடற்கரையோராமாக வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வைக்கப்பட்ட சிவலிங்கத்தை அப்பகுதி சைவ மக்கள் வழிபட்டதுடன், அந்த இடத்தில் தொடர்ச்சியாக வழிபடவும் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

(ஐ-02)

## 18 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 01

அச்சுவேலி - இடைக்காட்டு பகுதியில் சொகுசு காரில் பெருந்தொகையான போதைப்பொருளை கடத்திச் சென்ற இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை இந்தக் கைது இடம்பெற்றது. இடைக்காடு பகுதியில் இருந்து சுன்னாகத்துக்கு போதைப்பொருளை கடத்திச் செல்லும்போதே குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவரிடம் இருந்து 18 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. அத்துடன், அவரின் காரும் கைப்பற்றப்பட்டது.

கைதான நபர் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக போதைப் பொருள் தடுப்பு பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-03)

## 15 கிலோ கேரள கஞ்சாவுடன் உரும்பிராயில் ஒருவர் கைது!

மோட்டார் வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்ட 15 கிலோ கேரள கஞ்சாவை கைப்பற்றிய பொலிஸார், அதனை கடத்தியவரையும் கைது செய்தனர்.

உரும்பிராய் பகுதியிலேயே இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கல்வியங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

(ஐ)

## பாடசாலை விளையாட்டு போட்டியில் புகுந்து தாக்குதல்!

### நான்கு பேர் கைது

கிளிநொச்சி, ஏப். 01

கிளிநொச்சி - சாந்தபுரம் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் நுழைந்து தாக்குதல் நடத்திய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரெனப் புகுந்த நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 6 பேர் தொடர்புபட்டுள்ளனர் என்றும் ஏனைய இருவரையும் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பிராந்திய இணைப்பை மேம்படுத்த இலங்கையுடன் கூட்டு ஒத்துழைப்பு

## இந்தியா, ஜப்பான் தூதுவர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 01**

**பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் கூட்டு ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என்று இலங்கைக்கான இந்திய ஜப்பான் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.**



பாத்பைண்டர் மன்றம் தொகுத்துள்ள அறிக்கையை வெளியீட்டு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் கலந்து கொண்டார். இதன்போதே, இந்தியா, ஜப்பான் நாடுகளின் தூதுவர்கள் இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்தியாவும் ஜப்பானும் அமைதியான முற்போக்கான வளமான இந்தோ - பசுபிக் குறித்து பரந்துபட்ட நலன்களை பகிர்ந்துகொள்கின்றன என இலங்கைக்கான இந்திய தூதுவர் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து, சுதந்திரமான வெளிப்படையான இந்தோ - பசுபிக் கொள்கையில் தனது நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

ஐ. ஆர். ஓ. ஏ. அமைப்பில் இந்தியா முக்கியமான நாடு என்பதை வலியுறுத்தியுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் இங்குள்ள மக்களின் செழிப்புக்காகவும் அனைத்து தரப்பினரினதும் நன்மைக்காகவும் இந்தியா - ஜப்பான் - இலங்கை இணைந்து செயல்படுவதற்கான பல வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது இலங்கையின் முன்னுரிமைகளின் அடிப்படையில் காணப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேபோன்று, "கடந்த வருடங்களில் ஜப்பானும் இந்தியாவும் பிராந்தியத்தில் சாதகமான தாக்கத்தை செலுத்தியுள்ளன", என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடியாகி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளும் இலங்கை உட்பட பிராந்தியத்துக்கு எவ்வாறு நன்மைகளை கொண்டுவரமுடியும் என்பதை வெளிப்படுத்துவதற்கு இணைப்பு சிறந்த விடயமாகும். இந்த நோக்கத்துக்காக பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் முன்னோக்கு நுண்ணறிவு மேலும் முக்கியமானது இந்த அறிக்கை அதனை துல்லியமாக குறிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமரின் இந்திய பயணத்தின்போது இரு நாடுகளின் தலைவர்களும் இலங்கையுடனான ஒத்துழைப்பு குறித்து கருத்துகளை பரிமாறிக் கொண்டனர் இலங்கையின் கடன் விவகாரம் உட்பட அனைத்து விடயங்களிலும் நெருக்கமாக இணைந்து செயல்பட இணங்கினார்கள் எனவும் ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாடசாலை வான் கட்டணம் 8 சதவீதத்தால் குறைந்தது

கொழும்பு, ஏப். 01

அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவைகள் சங்கத்தால் எதிர்வரும் மே மாதம் முதல் பாடசாலை வான் கட்டணம் 8 சதவீதத்தால் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் தலைவர் என். எம். கே. ஹரிச்சந்திர பத்மசிறி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை குறைத்ததைத் தொடர்ந்து இந்தக் கட்டணம் குறைக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை வாகனங்கள் மற்றும் பஸ்கள் இயங்குகின்றன. இதனை நம்பி தொழில் நடத்துபவர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எரிபொருளின் விலை குறைவடைந்துள்ள போதிலும், வாகனங்களின் ரயர்கள், பற்றரிகள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், தமது பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியது!

கொழும்பு, ஏப். 01

நாட்டில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குமான எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பெற்றோலிய தொழில் சங்கங்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் எரிபொருள் விநியோகத்தில் சில தாமதங்கள் ஏற்பட்டன.

எவ்வாறாயினும், பாதுகாப்பு பிரிவினரின் தலையீட்டுடன், விநியோக செயல்முறையை வழமைக்குத் திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தற்போது நாடளாவிய ரீதியில் வழமையான எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் பொலிஸாரின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றன. (ஐ)

# கஞ்சா கடத்தலில் தேடப்பட்ட பொலிஸ்காரர் நீதிமன்றில் சரண்!

தென்மராட்சி, ஏப். 01

எழுதுமட்டுவாழில் கஞ்சா பொதி மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேடப்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் சட்டத்தரணிகள் மூலம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

கடந்த 9ஆம் திகதி அரச புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில், கொடிகாமம் பொலிஸார் எழுதுமட்டுவாழில் சுற்றி வளைப்பு மேற்கொண்ட போது, 16 கிலோ கஞ்சா பொதியை கைவிட்டு இருவர் தப்பியோடினர்.

போதைப்பொருள் கடத்தல் காரர்களின் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அந்த மோட்டார் சைக்கிள் மன்னார், சிலாவத்துறையில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரின் பெயரில் பதிவாகியிருந்தது. அந்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்.

அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடத்தலுடன் தொடர்புடைய மற்றொருவரும் கைதானார். அவர் பெருந்தொகை பணத்தை பரிமாற்றம் செய்து வந்த விபரங்களையும் பொலிஸார் கண்டறிந்தனர்.

கைதான பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ்காவலில் வைத்து விசாரிக்கப்பட்டார். தனது மோட்டார் சைக்கிளை மூத்த சகோதரனே பயன்படுத்துவதாகத் தெரிவித்தார்.

அவரின் மூத்த சகோதரனும் பொலிஸ் உத்தியோகத்தரே. அவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர். இந்த சமயத்தில் அவர் தலைமறைவாகி விட்டார்.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை சட்டத்தரணிகள் மூலம் அவர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சரணடைந்தார். இலங்கை தமிழரசு கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளை தலைவரும், சட்டத்தரணியுமான கே.சயந்தன் உள்ளிட்ட 3 சட்டத்தரணிகள் ஊடாக அவர் சரணடைந்தார்.

சரணடைந்த பொலிஸ் உத்தியோகத்தரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க கொடிகாமம் பொலிஸார் அனுமதி கோரினர். எனினும், நீதிமன்றம் அந்த கோரிக்கையை நிராகரித்து, 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ஐ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போராட்ட முன்னாயத்த கூட்டம்!

## இன்று தந்தை செல்வா அரங்கத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 01

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமை, வடக்கு - கிழக்கில் தமிழின தொல்லியல் அடையாளங்கள் அழிக்கப்படுவது தொடர்பாகவும் பெருமளவில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள், தொழில்சங்கங்கள், மத அமைப்புகள், மதத் தலைவர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில், தமிழின அடையாளங்கள் சிதைக்கப்படுவதற்கு எதிராகவும் இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் பெரியளவிலான எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்கவும் எமது மத அடையாளங்களையும் இன அடையாளங்களையும் வருகின்ற காலங்களில் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கடும் வெப்பம் அதிக நீர் அருந்துக!

கொழும்பு, ஏப். 01

நாட்டில் தற்போது கடும் வெப்பம் நிலவுவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நன்றாக தண்ணீர் அருந்துமாறு பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ கேட்டுள்ளார்.

பாடசாலை செல்லும் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் வயதைப் பொறுத்து 4 முதல் 6 கிளாஸ் வரை தண்ணீர் அருந்த வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ஐ)

# மிகை பணவீக்க நாடுகள் பட்டியலில் இலங்கை நீக்கம்!

கொழும்பு, ஏப். 01

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கியால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் உலகின் மிகை பணவீக்க நாடுகளின் பட்டியலில் இருந்து ஏறக்குறைய ஒரு வருடத்தின் பின்னர் இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

அவரின் பணவீக்கச் சுட்டெண் படி, ஒரு காலத்தில் இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கை, ஆசியாவிலேயே அதிக பணவீக்கத்தைக் கொண்ட நாடாகவும் இருந்தது.

இந்நிலையில், அவர் கடந்த 23ஆம் திகதி வெளியிட்ட சுட்டெண்ணில் இருந்து இலங்கை நீக்கப்பட்டு 18 நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாடுகளின் கடன்களை திருப்பி கொடுப்பதில் நெருக்கடி!

கொழும்பு, ஏப். 01

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் கிடைத்துள்ளபோதிலும், வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்துவதில் தொடர்ந்தும் நெருக்கடி நிலை காணப்படுவதாக இலங்கை அதிகாரிகள் கடன் வழங்குநர்களுக்கு அறிவித்துள்ளனர்.**

இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச கடன் வழங்குநர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த விடயம் அறிவிக்கப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் இந்த கலந்துரையாடலின்போது தெளிவுபடுத்தப்பட்டதாகவும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதிக்குள், குறிப்பிடத்தக்க அளவு வெளிநாட்டு நாணய நெருக்கடியை சந்தித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையை சரி செய்வதற்கு மேலும் கடனைப் பெறுவதால், கடன் நிலையை முறையாக பேண முடியாது போகும் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள சர்வதேச கடன்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் கடன் வழங்குநர்களிடம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் விசேட வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# சுற்றுலா பயணிகள் மூலம் 17 கோடி டொலர் வருமானம்

கொழும்பு, ஏப். 01

கடந்த பெப்ரவரி மாதம் சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் இலங்கையின் வருமானம் 17 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஜனவரி மாதத்தை விட 80 இலட்சம் டொலர்கள் அதிகமாகும்.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, பெப்ரவரி 2022 இல், சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் இலங்கைக்கு 16.9 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே, ஜனவரி 2023 இல் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 545 சுற்றுலா பயணிகளும் மற்றும் 2022 பெப்ரவரியில் 96 ஆயிரத்து 507 பதிவு செய்யப்பட்ட சுற்றுலா பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுகையில், பெப்ரவரி 2023 இல் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 639 ஆக அதிகரித்துள்ளது.

ரஷ்யா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளிலிருந்து பெப்ரவரி மாதம் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, மார்ச் மாதத்தில் ஏற்கனவே ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இதன்படி, இந்த வருடத்தின் மூன்று மாதங்களிலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகளை இலங்கை வரவேற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சஜித், ரஞ்சித்துக்கு நீதிமன்று காலக்கெடு!

கொழும்பு, பெப். 01

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்புரிமையை சவாலுக்கு உட்படுத்தி இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கல் செய்த மனுவின் விசாரணையின்போது, பிரதிவாதிகள் விடுத்த கோரிக்கைக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியது.

இதன்படி, மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோர் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிரதிவாதிகள் தங்கள் ஆட்சேபனைகளை மே 22ஆம் திகதி தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# பொலிஸ் ஜீப்பை சுற்றிவளைத்து சந்தேகநபரை விடுவிக்க முயற்சி!

## மேல் வெடி வைத்து கூட்டம் கலைப்பு

கொழும்பு, ஏப். 01

கொலன்னாவை - சிங்கபுர பகுதியில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரை விடுவிக்க முற்பட்ட குழுவை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக் கலைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் துமிந்த ஜயதிலக்க உட்படலான குழுவினர் கொலன்னாவை - சிங்கபுர விளையாட்டரங்கம் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸார், ஒருவர் எதையோ எறிவதை அவதானித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவர முற்பட்ட போது, சந்தேகநபரின் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் பொலிஸ் ஜீப்பை சுற்றிவளைத்து சந்தேகநபரை பொலிஸாரின் பிடியிலிருந்து மீட்க முயற்சித்துள்ளனர்.

இதனையடுத்தே வானத்தை நோக்கி சுட்டுக் கூட்டத்தை கலைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம்!

கொழும்பு, ஏப். 01

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏப்ரல் மாதத்துக்கான சம்பளத்தை முழுமையாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்துக்கான அடிப்படை சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் அனுமதி கோரி குறித்த பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக சுமார் 3 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குளவிக்கொட்டால் முதியவர் மரணம்!

ஹற்றன், ஏப். 01

குளவிக்கொட்டுக்கு இலக்காகி தலவாக்கலை - லிந்துலை பேர்ஹாம் தோட்டத்தில் நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான மற்றுமொருவர் லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தேயிலை தோட்டத்தில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்து கொண்டிருந்தவர்களே குளவிக் கொட்டால் பாதிக் கப்பட்டனர். இதில், 72 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

# இந்தியாவிலிருந்து மேலும் 20 இலட்சம் முட்டைகள்!

கொழும்பு, ஏப். 01

இந்தியாவில் இருந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மேலும் 20 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. முட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், தேவையான நடவடிக்கையின் பின்னரே அது இறக்கப்படும் என இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் முதல் இருப்பு நேற்று முன்தினம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டது.

20 இலட்சம் முட்டைகள் வத்தளையில் உள்ள அரச வர்த்தகக் கூட்டுத்தாபன களஞ்சிய நிலையத்தில் இருந்து விநியோகிக்கப்படுகின்றன. இவை, ஹோட்டல் மற்றும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு தலா 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இதனிடையே, இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை வெதுப்பக தொழிலில் உள்ளவர்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கான தொடர் வழிகாட்டல்களை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சு உத்தரவு பிறப்பித்தது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளைக் கையாளும் போது கையுறைகளைப் பயன்படுத்தவும், முட்டை ஓடுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படவும் பரிந்துரைக்கப்பட்டது. மீதமுள்ள முட்டை ஓடுகள் எந்த சூழ்நிலையிலும் சுற்றுச்சூழலில் கொட்டப்படாமல் இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# விவசாயிகளுக்கான மானியங்களை அறிவிக்காத அதிகாரி பணிநீக்கம்!

கொழும்பு, ஏப். 01

அரசாங்கம் அறிமுகப்படுத்திய மானியங்கள் தொடர்பில் கமநலப் பிரிவில் உள்ள 3,000 விவசாயிகளுக்கு தெரியப்படுத்த தவறியமைக்காக மெல்சிறிபுர ரம்பே கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரை கமநல அபிவிருத்தி திணைக்களம் நேற்றுமுன்தினம் பணிநீக்கம் செய்தது.

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

கமநல பிரிவில் உள்ள விவசாயிகளின் நலனுக்காக அரசாங்கம் அறிமுகப்படுத்திய இலவச மானியங்கள் தொடர்பில் தமக்குத் தேவையான தகவல்களை இந்த அதிகாரி வழங்கவில்லை என விவசாய பிரதிநிதிகள் குழுவொன்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாடுகளை ஆராய்ந்து அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

அதிகாரியின் செயல்பாட்டால், ரம்பே கமநல சேவைகள் பிரிவில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் அரசாங்கம் வழங்கிய 10 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை இழந்தனர். அத்துடன், இலவச டி. எஸ். பி. உரம், சீன அரசு வழங்கிய எரிபொருள் மானியம் உள்ளிட்ட பல மானியங்களும் இல்லாமல் போனது.

இது தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மேலும் பல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த விசாரணைகளையும் விரைந்து முடிக்குமாறும் அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

ஈழநாடு



# “காவல்துறையினருக்கு இறுதி எச்சரிக்கை”: காணொளி வெளியிட்டு பரபரப்பை கிளப்பிய அம்ரித்பால் சிங்!

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டுமென்ற ‘காலிஸ்தான்” கோரிக்கையை மிகத்தீவிரமாக முன்னெடுத்து வரும் அம்ரித்பால் சிங், தற்போது பஞ்சாப் மாநிலத்தில் தேடப்பட்டு வரும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த மார்ச் 18ஆம் திகதி முதல் பஞ்சாப் காவல்துறையினர் அவரை தேடி வருகின்றனர். இந்த நிலையில் தற்போது காணொளி ஒன்றை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் அம்ரித்பால் சிங்.

அந்த காணொளியில் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மானுக்கு அகல் தக்த்தின் ஜதேதருடன் ஏற்பட்ட வாக்குவாதம் குறித்து அவர் பேசியுள்ளார். இது இந்த காணொளி சமீபத்தில் எடுக்கப்பட்டது தான் என்பதை உறுதி செய்கிறது.

‘தற்போது நடந்துவரும் பிரச்னைகள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு, வரும் ஏப்ரல்13ஆம் திகதி, சர்பத் கல்சாவிற்கு (சீக்கியர்களின் மாநாடு) ஏற்பாடு செய்யுமாறு அகல் தக்த்தின் ஜதேதரிடம், நான் கூறியிருக்கிறேன்” என்று அம்ரித்பால் சிங் அந்த காணொளியில் கூறுகிறார்.

18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் கூட சீக்கியர்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்னைகள் தொடர்பாக முடிவு எடுப்பதற்கு சர்பத் கல்சா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே தற்போது அம்ரித்பால் சிங்கின் இந்த அழைப்பிற்கு ஜதேதர் பதிலளிப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கடந்த மாதம் பெப்ரவரி 23 ஆம் தேதி, அமிர்தசரஸ் பகுதியில் உள்ள அஜ்னாலா காவல் நிலையத்தில் ஏற்படுத்திய கலவரத்திற்காக அம்ரித்பால் சிங் தேடப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**காணொளியில் அம்ரித்பால் சிங் கூறியிருப்பது என்ன?**

அம்ரித்பால் சிங் வெளியிட்டிருக்கும் காணொளி எடுக்கப்பட்டிருக்கும் நேரம் மற்றும் திகதி குறித்து தெளிவான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. ஆனால் அதேசமயம் மார்ச் 27ஆம் திகதி அன்று தான் ஹஅகல் தக்த்தின்ஹ ஜதேதர், ஹர்பிரீத் சிங்கிடம் மாநாட்டுக்காக தான் அழைப்புவிடுத்ததாக குறிப்பிடுகிறார் அம்ரித்பால் சிங்.

அதேபோல் மார்ச் 18 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வு குறித்து பேசும் அம்ரித்பால் சிங், ‘இந்த அரசு என்னை வீட்டில் வந்து கைது செய்ய முயன்றிருந்தால், நான் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருப்பேன். ஆனால் ஒரு பெரும் படையுடன் அவர்கள் என்னை சுற்றிவளைத்து கைது செய்ய முயன்றார்கள். ஆனால் எல்லாம் வல்ல இறைவன் என்னை காப்பாற்றிவிட்டார்” என்று குறிப்பிடுகிறார்.

‘அவர்கள் எங்களை மால்வாவிற்கு செல்லவிடாமல் தடுத்து, கல்சா விகாரை (ஊர்வலம்) மேற்கொள்ளவிடாமல் செய்வதற்கு முயற்சிக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்திருந்தேன். ஆனால் நாங்கள் எப்படியாவது மால்வாவிற்கு செல்ல வேண்டும். பின் ஏதேனும் ஒருவழியில் முயற்சி செய்து கல்சா விகாரை நடத்த வேண்டும்” என்று தெரிவிக்கிறார் அம்ரித்பால்.

பஞ்சாப்பின் பல்வேறு இடங்களில் கல்சா விகாரை நடத்துவதற்கு அம்ரித்பால் சிங் திட்டமிட்டிருந்தார். மார்ச் 19ஆம் திகதி மால்வாவில் இரண்டாம் கட்ட கல்சா விகார் நடைபெறவிருந்தது.

‘இணையதளம் முடக்கம் காரணமாக, எங்களால் எதையும் தொடர்புகொள்ள முடியவில்லை. வெளியில் என்ன நடக்கிறது என்பதே எங்களுக்கு முதலில் தெரியவில்லை. அதன்பின் சில செய்திகளை படித்து, என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொண்டேன்” என்று அம்ரித்பால் சிங் அந்த காணொளியில் கூறுகிறார்.



சர்பத் கல்சா குறித்து அவர் கூறும்போது, ‘இந்த விஷயத்தில் ஜதேதர் சாஹிப் வலிமையான முடிவை எடுப்பார் என்று நம்புகிறேன்.” என்று தெரிவித்தார்.

பஞ்சாப் மற்றும் சீக்கியர்களின் நலனுக்காக அவர் இதை செய்ய வேண்டுமென அம்ரித்பால் கூறுகிறார்.

**அம்ரித்பாலின் காணொளிக்கு காவல்துறையினர் என்ன சொல்கின்றனர்?**



பஞ்சாப் மாநில டி.ஐ.ஜி., நரேந்திர பார்கவாவை தொடர்பு கொண்டபோது பேசிய அவர், “இந்த காணொளியின் உண்மைதன்மை குறித்து உறுதியாக கூறமுடியவில்லை”என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, “இந்த காணொளி உண்மையாகவே அமிர்த்பாலால் எடுக்கப்பட்டு, பகிரப்பட்டிருந்தால் அதன் மூலம் ஒன்றே ஒன்று மட்டும் தான் தெளிவாகிறது. அதாவது அவர் பஞ்சாப் காவல்துறையினரின் கட்டுபாட்டில் இல்லை” என்று தெரிவித்தார்.

‘பஞ்சாப் மாநில காவல்துறையினர் அவரை தொடர்ந்து தேடி வருகின்றனர். தற்போது அவர் காணொளி வெளியிட்டிருப்பது, அவர் ஊடகங்களிடம் சரண் அடைந்துவிட்டார் என்பதையே காட்டுகிறது” எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

இதற்கு முன்னதாக பேசிய அமிர்தசரஸின் காவல் ஆணையாளர் நௌஹினால் சிங், ‘தர்பார் சாஹிப்பிற்கு யார் வந்து சரணடைந்தாலும், அவர்கள் மேல் சட்டத்தின்படி முறையான நடவடிக்கைகள் மட்டுமே எடுக்கப்படும் என்பது குறித்து நான் உறுதியளிக்கிறேன். சரண் அடையும் நபர் எந்தவொரு விதத்திலும் ஒடுக்குமுறைகளை சந்திக்க மாட்டார்” என்று தெரிவித்திருந்தார்.

**யார் இந்த அம்ரித்பால் சிங்?**

அம்ரித் பால் சிங் ’வாரிஸ் பாஞ்சாப்டி’ என்ற சீக்கிய இயக்கத்திற்கு தலைவராக இருக்கிறார். சீக்கியர்களுக்கு என தனி நாடு வேண்டும் என்ற முழக்கத்தை அவர்கள் தொடர்ச்சியாக எழுப்பி வருகின்றனர்.

துபாயில் சில காலம் வசித்து வந்த அம்ரித்பால் சிங், கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவிற்கு திரும்பினார். அம்ரித் சஞ்சார் என்ற பெயரில் போதைப் பொருட்கள் ஒழிப்பு இயக்கம் ஒன்றை துவங்கி, இளைஞர்களை ஒன்றுதிரட்டி செயல்பட்டு வருகிறார்.

ஆனால் அதன்பின் அவருடைய சர்ச்சைக்குரிய பேச்சுகளால் சமூகத்தில் கவனம் பெறத் துவங்கினார். இறுதியாக பஞ்சாபின் அஜ்னலா காவல்நிலையத்தில் நடந்த கலவரம் காரணமாக தேசியளவில் பேசுபொருள் ஆனார் அம்ரித்பால் சிங்.

கடந்த மார்ச் 18ஆம் திகதியிலிருந்து அவரை காவல்துறையினர் தேடி வருகின்றனர். பெரும் அளவிலான எண்ணிக்கையில் அவரது ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ●



# இலங்கை ஈஸ்டர் குண்டு தாக்குதல்: தேடப்பட்ட பெண் சாரா உயிரிழந்தமை நான்கு வருடங்களுக்கு பின் உறுதி!

இலங்கையில் 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலை அடுத்து, தேடப்பட்டு வந்த சாரா ஜாஸ்மீன் என அழைக்கப்படும் புலஸ்தி மஹேந்திரன் அம்பாறையில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை - சாய்ந்தமருது பகுதியில் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி வீடொன்றிற்குள் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த தற்கொலை தாக்குதல் சம்பவத்தில் ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கூறப்படும் தரப்பினரே உயிரிழந்ததாக பாதுகாப்பு தரப்பினர் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில், குறித்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து, சாரா ஜாஸ்மீன் என அழைக்கப்படும் புலஸ்தி மஹேந்திரன் நாட்டை விட்டு இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்பட்டது.







சாரா ஜாஸ்மீன் இந்தியாவில் தலைமறைவாகியுள்ளதாக கூறியே விசாரணைகள் நடத்தப்பட்ட நிலையில், மறுபுறத்தில் சாரா ஜாஸ்மீனின் மரபணு பரிசோதனை நடத்தப்பட்டது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக, தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை அடையாளம் கண்டுக்கொள்வதற்காக நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி, விசேட சட்ட மருத்துவ அதிகாரிகள், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், அரச பகுப்பாய்வு திணைக்கள விசேட அதிகாரிகள் அடங்களாக குழுவொன்று இந்த மரபணு பரிசோதனை தொடர்பான ஆய்வுகளை நடத்தியது.

இவ்வாறு நடத்தப்பட்ட மரபணு பரிசோதனை ஆய்வுகளின் மூலம், சாரா ஜஸ்மீன் என அழைக்கப்படும் புலஸ்தி மஹேந்திரன் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரச பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் சமர்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாரா ஜஸ்மீன் என அழைக்கப்படும் புலஸ்தி மஹேந்திரனின் தாயிடமிருந்து பெறுக்கொள்ளப்பட்ட மரபணு மாதிரிகள் மற்றும் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட்ட எலும்பு எச்சங்கள் ஆகியவற்றின் மரபணு மாதிரிகள் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தாய் மற்றும் குழந்தை ஆகியோருக்கு இடையிலான மரபணு பெறுபேறுகளுக்கு அமைய, இருவருக்கும் 99.9999 வீதம் பொருந்துவதாக அரச பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த அறிக்கையின் பிரகாரம், சாரா ஜஸ்மீன் என அழைக்கப்படும் புலஸ்தி மஹேந்திரன், 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் தேதி சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதையடுத்து, அரச பகுப்பாய்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையை, பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2019 ஈஸ்டர் தாக்குதல்**

இலங்கையில் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி, ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் 8 தற்கொலை குண்டுதாரிகள் அடங்களாக 277 பேர் உயிரிழந்திருந்தனர்.

அத்துடன், இந்த தாக்குதல் சம்பவத்தில் சுமார் 400ற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்ததாக தாக்குதல் தொடர்பில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த தாக்குதலில் 40 வெளிநாட்டு பிரஜைகளும், 45 குழந்தைகளும் உயிரிழந்திருந்தனர்.

இலங்கையிலுள்ள முக்கிய மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்காகக் கொண்டு இந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாக்குதலை தேசிய தவ்ஹீத் ஜமாஅம் அமைப்பு நடத்தியமை, விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது.

தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவராக செயற்பட்ட சஹ்ரான் ஹாசிம் இந்த தாக்குதலுக்கு தலைமை தாங்கியிருந்ததுடன், அவரும் இந்த தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்திருந்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றன.

முஸ்லிம்களை இலக்காக கொண்டு, பல்வேறு பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், பல கோடி ரூபா சொத்துக்களுக்கும் இதனூடாக சேதம் விளைவிக்கப்பட்டது.

**நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு**

2019ம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன, முன்னாள் தேசிய புலனாய்வு பிரதானி சிசிர மென்டீஸ் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு கடந்த ஜனவரி மாதம் 12ம் திகதி தீர்ப்பு வழங்கியது.

இதற்கமைய, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபா செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

அத்துடன், முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வு பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோர் 75 மில்லியன் ரூபா விதமும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேபோன்று, முன்னாள் புலனாய்வு பிரதானி சிசிர மென்டீஸ் 10 மில்லியன் ரூபாவை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு செலுத்த வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நட்டஈட்டு தொகையானது, தமது சொந்த பணத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது. ●





# யாழ். மண்ணின் ஆன்மீக அடையாளமான யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகளின் குருபூசை தினம் இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

யோகர் சுவாமிகள் 1872 வைகாசி 29 முதல்1964 பங்குனி 24 வரை ஈழத்தில் வாழ்ந்த சைவத் துறவியும் திருக்கயிலாய பரம்பரையில் நந்திநாத சம்பிரதாயத்தில் வந்த குரு பரம்பரையின் 161ஆவது சற்குருவும் ஆவார்.

**ஆரம்பகால வாழ்க்கை**

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் - சின்னாச்சியம்மை தம்பதிக்கு 1872 மே 29 இல் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த யோகர் சுவாமிகளின் இயற் பெயர் சதாசிவம். இளம் வயதிலேயே தாய் இறந்துவிட தாயாரின் சகோதரி முத்துப்பிள்ளை அம்மையாரால் வளர்க்கப்பட்டார்.

சுவாமிகளின் ஐந்து வயதானதும், தமது மகனுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை தனது தம்பியார் சின்னையரிடம் ஒப்படைத்தார். அக்காலத்தில் சுவாமிகளின் தகப்பனாரின் சகோதரி “முத்துப்பிள்ளை“ என்பவர் கொழும்புத்துறைக்கு அருகிலுள்ள “பாண்டியன் தாழ்வு“ என்னும் குறிச்சியில் வாழ்ந்து வந்தார். அவர் சைவப்பற்றுமிக்கவர். தம்மிடம் மருமகன் வரும்போது சைவ நூல்களையும் இதிகாசங்களையும் படிக்க வசதி செய்து கொடுத்தார். அவருடைய சைவப்பற்றுக்கு வித்திட்ட பெருமை முத்துப்பிள்ளையையே சாரும். கொழும்புத்துறையில் அந்நாளில் இருந்த கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் (சென். பற்றிக்ஸ்) கல்லூரியில் மேற்படிப்பும் கற்றார்.

கல்வி முடிந்ததும் இலங்கை நீர்ப்பாசன திணைக்களத்தில் களஞ்சிய காப்பாளராகப் பணியில் இணைந்து கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்திட்டத்தில் பணிபுரிந்தார். கடமையைக் கண்ணாகக் கருதும் சுவாமிகள் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார். கிளிநொச்சியில் வேலை பார்க்கும்போது ஓய்வு நேரங்களைத் தியானத்தில் கழித்து வந்தார். மற்றவர்கள் உறங்கும்போது சுவாமிகள் வெகுநேரம் தியானத்தில் ஈடுபடுவது வழக்கம்.

சுவாமிகள் இந்தக் காலத்தில் நூற்றுக்கணக்கான தோத்திரப் பாடல்களை மனனம் செய்து கொண்டார். இப்படி ஏராளமான தேவாரம், திருவாசகம், திருமந்திரம், அருணகிரிநாதர் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள் முதலியவற்றை மனப்பாடஞ் செய்தார். தாயுமானவர் பாடல்களிலும் சுவாமிகளுக்கு ஈடுபாடு அதிகம். அவற்றைத் தமது நற்சிந்தனைகளிலும் திருமுகங்களிலும் எடுத்தாண்டுள்ளார். சுவாமிகளின் நற்சிந்தனை வசனப்பகுதியில் காணப்படும் பின்வரும் வரிகள் “சிவதொண்டன்“ நிலையத்தின் இலட்சியங்களை விளக்குகின்றன. “சொல்லெல்லாம் மோனம் - தொழிலாதியும் மோனம் எல்லாம் தன் மோன நிறைவே“

செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் முதன்முதலாக செல்லப்பா சுவாமியைக் கண்ட நாளிலிருந்து இவர் வாழ்க்கை திசைமாறியது. சதாசிவத்தை ஆழமான கண்களால் ஊடுருவி, “யாரடா நீ என்று கேட்டு, ஒரு பொல்லாப்பும் இல்லை!”, என்ற வார்த்தைகளை செல்லப்பா சுவாமிகள் உதிர்த்த கணம், சதாசிவத்தின் மனம் லௌகிக வாழ்க்கையை உதறியதாகச் சொல்லப்படுகின்றது. பின் ஐந்து ஆண்டுகள் அவரிடம் சீடனாக வாழ்ந்த சதாசிவம், செல்லப்பரால் சந்நியாச தீட்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட கொழும்புத்துறையில் ஓர் இலுப்பை மரத்தடியில் அவர் யோக சாதனைகளில் திளைத்தார். செல்லப்பா சுவாமிகள் சமாதியடைய சில நாள் முன்வரை, யோகர் சுவாமிகள் அவரை மீண்டும் சந்திக்கவில்லை.

பின் அங்கேயே ஆச்சிரமம் ஒன்றை அமைத்த அவர், இலங்கையெங்கனும் யாத்திரை செல்வதும் நற்சிந்தனைகளை வழங்குவதுமாக இருந்தார். 1940இல் இந்திய பயணம் மேற்கொண்ட அவர், திருவண்ணாமலையில் ரமண ரிஷிகளையும் சந்தித்தார். 1934 மார்கழியில், அவரால் தொடங்கப்பட்ட சிவதொண்டன் இதழ் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றது.

1964 பங்குனி 24ஆம் நாள் மாலை 3:30 மணியளவில் யோகர் சுவாமிகள் தனது 91ஆவது வயதில் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் சிவ சமாதியடைந்தார்

**நான்கு மகாவாக்கியங்கள்**

சுவாமிகளின் திருக்கையெழுத்து செல்லப்பா தேசிகர் யோகர் சுவாமிகளுக்குக் ஞானத்தைப் போதிக்கும் வகையில் அருளிய மாணிக்க மணியனைய வார்த்தைகளை யோகர் சுவாமிகளும் தன் பக்தர்களுக்கும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார். மேலும், இவற்றை தன்னுடைய நற்சிந்தனையிலும் பரவலாக விரவி வைத்தார். யோகர் சுவாமியின் அடியார்களால் “மகா வாக்கியங்கள்“ என்று கூறப்படும் அவை வருமாறு “எப்பவோ முடிந்த காரியம்”, “நாம் அறியோம்”, “ஒரு பொல்லாப்பும் இல்லை”, ”முழுதும் உண்மை”.

**அருளிய நூல்கள்**

யோகர் சுவாமிகள் பாடிய பாடல்கள், கவிதைகள், அருண்மொழிகள் என்பன, அவரது சீடர்களான மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமி, செல்லத்துரை சுவாமி என்போரால் தொகுக்கப்பட்டு, தமிழில் “நற்சிந்தனை“ எனும் நூலாகவும், ஆங்கிலத்தில் “வுாந றுழசனள ழக ருரச ஆயளவநச“ என்ற பெயரிலும் வெளியிடபசீடர்கள் - யோகர் சுவாமிகளின் நேரடிச் சீடர்களாக, மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமி, செல்லத்துரை சுவாமிகள் ஆகியோர் சொல்லப்படுகின்றனர். இவர்களில் சந்தசுவாமி, இலங்கையின் கடைசி ஆங்கிலேய ஆளுநர் சோல்பரி பிரபுவின் மகன் ஆவார். ஹவாய் சைவ ஆதீனத்தில் 162ஆவது நந்திநாத பரம்பரை சற்குருவாக அமர்ந்திருந்த சிவாய சுப்ரமுனிய சுவாமியும் யோகர் சுவாமிகளது சீடரே! இவர்களைவிட, கௌரிபாலா (ஜேர்மன் சுவாமி), பரிநரிக்குட்டி சுவாமி (அவுஸ்திரேலியா) ஆகியோரும் சுவாமிகளின் சீடர்கள் ஆவர்.

இந் நாளில் சிவயோக சுவாமிகள் அருளை பெற்று இன்மை மறுமை பயன்களை பெற்று உய்வோமாக.






# சுகாதார நிலையத்துக்கு காணி உறுதி வழங்கல்!

கல்முனை, ஏப். 01
கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முயற்சியால், சம்மாந்துறை பிரதேசத்துக்குட்பட்ட செந்நெல் கிராம ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் காணி உறுதிப்பத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த காணி உறுதிப்பத்திரத்தை கையளிக்கும் நிகழ்வு, சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம். ஹனிபா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரிபாஸ், செந்நெல் கிராமம் ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர திருமதி ஏ. எப். அஸீஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# விபுலானந்தா வித்திக்கு கணனிகள் அன்பளிப்பு



மட்டக்களப்பு, ஏப். 01
மட்டக்களப்பு மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயத்துக்கு கணனிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் பல்வேறு வாழ்வாதார மற்றும் கல்வி செயல்பாட்டுக்கான உதவிகளை முன்னெடுத்து வரும் சுவிஸ் உதயம் அமைப்பு இந்தக் கணனிகளை அன்பளித்தது.

சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த கணனிகள் வழங்கிவைக்கப்பட்டன.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவரும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான மு. விமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச் சங்க தலைவர் டி. சுதர்சன், பொருளாளர் க. துரைநாயகம் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டனர்.

பாடசாலையின் முன்னாள் அதிபர் சந்திரசேகரன், சுவிஸ் உதயம் அமைப்பின் செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் உட்பட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# தந்தை செல்வா பிறந்த தினம் திருமலையில் கடைப்பிடிப்பு!



திருகோணமலை, ஏப். 01
தந்தை செல்வாவின் 125வது ஜனன தினம் நேற்று திருகோணமலையிலும் கடைப்பிடிக்கப்பட்டது.

திருகோணமலை சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இலங்கை தமிழரசு கட்சியின் மாவட்ட கிளைத்தலைவர் எஸ்.குகதாசன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் செயலாளர் எஸ்.சுப்ரா, பொருளாளர் வெள்ளைத்தம்பி சுரேஸ் குமார் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பட்டாசில் பற்றிய தீயால் கடை எரிந்து நாசமானது!

மட்டக்களப்பு, ஏப். 01
ஏறாவூர் - புன்னைக்குடா வீதியில் பல்பொருள் விற்பனையகம் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது. பெரும் வெடிச் சத்தங்களுடன் தீ பற்றியதால் வீதியிலும் சுற்றியுள்ள கடைகள் மற்றும் வீட்டுப் பகுதிகளில் இருந்தவர்கள் அச்சமடைந்தனர்.

அந்தக் கடையின் மாடியில் வசித்த பெண்ணும் அவரின் பிள்ளைகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அத்துடன், தீ தொடர்ந்தும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

விற்பனைக்காக வைக்கப்பட்ட பட்டாசுகள் தீப்பற்றியதில் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின.

சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சா கடத்தியவர் சாய்ந்தமருதில் கைது!

கல்முனை, ஏப். 01
ஒரு கிலோ கேரளா கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றவரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், கல்முனையை சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்கவராவார். இவரை சாய்ந்தமருது இலங்கை வங்கி அருகே அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட கேரளா கஞ்சா, ஒரு தொகை பணம், கைபேசி மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேகநபர் நீண்ட காலம் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ -01)

# காட்டு யானைகளால் அம்மன் கோயில் சேதம்!



காரைதீவு, ஏப். 01
பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்று நள்ளிரவில் புகுந்த யானைகள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆலய சுற்றுமதிலை உடைத்ததுடன், அங்கிருந்த பணிமனை அறை, களஞ்சியசாலை என்பவற்றையும் உடைத்து சேதப்படுத்தின. அத்துடன், களஞ்சியசாலையில் இருந்த அரிசியையும் அவை உண்டுவிட்டு சென்றன.

அத்துடன், அங்கிருந்த மரத்தின் கிளைகளையும் அவை முறித்து விட்டுசென்றுள்ளன.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றோர் கைது

மட்டக்களப்பு, ஏப். 10
அனுமதி பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் ஒன்றையும், அனுமதிப் பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் ஒன்றையும் அதன் சாரதிகளுடன் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கித்துல் பிரதேசத்தில் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் றஜிக்காந்தன் தலைமையிலான குழுவினர் சாரதிகளை கைது செய்து கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

# இளம் பிக்குகள் துஷ்பிரயோகம் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!

கல்முனை, ஏப். 10
இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கைதான பிக்கு தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை - கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவின் விகாரை ஒன்றில் 3 இளம் பிக்குகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கூறி தொடரப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரிக்கப்பட்டது.

இந்த வழக்கில், கல்முனை விகாரை பிரதம பிக்கு முன்னர் கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# ட்ரம்ப்மீது குற்ற வழக்கு; விரைவில் சரணடைவார்?

மன்ஹாட்டன், ஏப். 01

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது மன்ஹாட்டன் கிராண்ட் ஜூரி குற்றவியல் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இதனால் அவர் கைதாகும் சூழல் எழுந்துள்ளது. இருப்பினும் கைதைத் தவிர்க்க ட்ரம்ப் தாமாகவே சரணடையலாம் என்று கூறப்படுகிறது. அடுத்த வாரம் சரணடைவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.**



76 வயதான டொனால்ட் ட்ரம்ப் தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஸ்டோமி டேனியல்ஸ்க்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் டொலர் வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும், அவர் இந்தத் தொகையை 2016 தேர்தல் பிரசார நிதியில் இருந்து கொடுத்தார் என்றும் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டின் பேரில் டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டை மான்ஹாட்டன் கிராண்ட் ஜூரி முன்வைத்துள்ளது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்படுவது இதுவே முதன்முறையாகும்.

முன்னதாக இந்த வழக்கு சட்டமா அதிபர் பணிமனையின் விசாரணையில் இருந்து வந்தது. அப்போது, ட்ரம்பின் முன்னாள் வழக்கறிஞரான மைக்கல் கோஹன் திடீரென இந்த வழக்கில் ட்ரம்புக்கு எதிராக சாட்சியமளித்தார். மேலும், நடிகைக்குப் பணம் வழங்கியதற்கான ஆதாரத்தையும் சட்டமா அதிபர் பணிமனை கைப்பற்றியது. இதனால் ட்ரம்ப்புக்கு நெருக்கடி வலுத்தது.

இந்த நிலையில், விரைவில் ட்ரம்ப் கைது செய்யப்படுவார் என்று தெரிகிறது. ஆனால், கைதைத் தவிர்க்க ட்ரம்ப் தாமாகவே சரணடையலாம் என்றும், அடுத்த வாரம் சரணடைவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# வடகொரிய ஆயுதங்களுக்கு ரஷ்யா உணவை வழங்குகிறது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஏப். 01

ஆயுதங்களுக்கு ஈடாக உணவு வழங்குவதற்காக வடகொரியாவுக்கு ரஷ்யா தூதுக்குழுவை அனுப்புகிறது என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான எந்தவோர் ஆயுத ஒப்பந்தமும் ஐ. நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறும் என்றும் கிர்பி தெரிவித்தார்.

உக்ரைனில் உள்ள ரஷ்ய இராணுவத்துக்கும் ரஷ்யாவின் கூலிப்படையின் வோக்னர் குழுவுக்கும் வடகொரியா ஆயுதங்களை வழங்குவதாக அமெரிக்கா முன்னர் குற்றம் சாட்டியது. அவரின் இந்தக் குற்றச்சாட்டுகளை வடகொரியா முன்னர் மறுத்திருந்தது.

இந்த நிலையில், ஓர் ஒப்பந்தம் குறித்து கிர்பி தெரிவித்துள்ளார்.

“வட கொரியாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்ப ரஷ்யா முயல்கிறது. வெடிமருந்துகளுக்கு ஈடாக உணவை ரஷ்யா வழங்குவதையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம்,” என்று அவர் கூறினார்.



வட கொரியா உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும், மேலும் பல தசாப்தங்களாக உணவுப் பற்றாக்குறையை அனுபவித்து வருகிறது. உலகின் மிகவும் சர்வாதிகார அரசாங்கங்களில் ஒன்றான வடகொரியாவின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியால் உணவு நெருக்கடியை எதிர்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படகு தீப்பிடித்ததில் 31 பேர் உயிரிழப்பு!

மணிலா, ஏப். 01

தெற்கு பிலிப்பைன்ஸில் பயணிகளை ஏற்றிச்சென்ற படகு திடீரென தீப்பிடித்ததில் அதில் பயணம் செய்த 31 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பேசிலன் மாகாணத்தின் ஆளுநர் ஜிம் ஹட்டாமேன் கூறுகையில், தெற்கு துறைமுக நகரமான ஜாம்போங்காவில் இருந்து சுலு மாகாணத்தில் உள்ள ஜோலோ நகருக்கு 250 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு நள்ளிரவு நேரத்தில் பேசிலன் நகருக்கு அருகே வந்தபோது திடீரென தீப்பிடித்தது.



தீயிலிருந்து தப்பிக்க படகிலிருந்து பலர் கடலில் குதித்தனர். இந்த சம்பவத்தில் 31 பேர் உயிரிழந்தனர். 7 பேரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கிணறு இடிந்து வீழ்ந்ததில் இந்தியாவில் 35 பேர் மரணம்!




புதுடில்லி, ஏப். 01

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் ஆலயமொன்றின் படிக்கட்டு கிணறு இடிந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 35ஆக அதிகரித்துள்ளது.

மத்திய பிரதேசத்தின் இந்தூரில் உள்ள பெலேஷ்வர் மகாதேவ் கோவிலில் நேற்றுமுன்தினம் ராமநவமி கொண்டாட்டம் நடைபெற்றது. இதன்போது படிக்கிணற்றில் வழிபாடு நடத்தியபோது படிக்கட்டுகள் இடிந்து விழுந்தன. இதனால், படிக்கட்டுகளில் நின்று கொண்டிருந்த பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கிணற்றுக்குள் தவறி விழுந்தனர்.

இதில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 என்று நேற்று அறிவிக்கப்பட்டது. மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளார். மீட்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)



# உலக வங்கியின் தலைவராக அஜய் போட்டியின்றி தெரிவாவார்!

வாஷிங்டன், ஏப். 01

உலக வங்கி தலைவர் பதவிக்கு இந்திய வம்சாவளியான அஜய் பங்கா பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் அறிவித்தார்.

உலக வங்கியின் தலைவர் பதவியில் உள்ள அமெரிக்கர் டேவிட் மால்பாஸ், ஜூன் 30 ஆம் திகதியில் இருந்து பதவி விலகுகிறார் என்று அறிவித்தார். இதனால் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது. உலக வங்கியில் பெருமளவு பங்குகளை அமெரிக்காவே கொண்டிருப்பதால், அந்த நாட்டினர்தான் தலைவர் பதவிக்கு வர முடியும்.

இந்நிலையில், இந்தப் பதவிக்கு இந்திய வம்சாவளியான அஜய் பங்கா (வயது 63) பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் அறிவித்தார். அவரை எதிர்த்து வேறு எந்த நாடும் தலைவர் பதவிக்கு யாரையும் நிறுத்தவில்லை. இதற்கான வேட்பு மனு தாக்கல் அவகாசம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. எனவே அஜய் பங்கா, உலக வங்கித்தலைவராக போட்டியின்றி தேர்வாகிறார். அவர் இந்தப் பதவியில் 5 ஆண்டுகள் தொடர்வார். (ஐ)

# இரு ஹெலிகள் மோதி 9 படையினர் மரணம்!

நியூயோர்க், ஏப். 01

அமெரிக்காவில் இரு ஹெலிகொப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 9 இராணுவத்தினர் பலியாகினர்.

அமெரிக்காவின் கென்டக்கியில் இராணுவ பயிற்சியின் போது இரண்டு அமெரிக்க இராணுவ பிளாக் ஹொக் ஹெலிகொப்டர்கள் விபத்துக்குள்ளாகின.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்துக்கான காரணம் குறித்து நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (ஐ)

ஈழநாடு



# இலங்கையுடனான ஒருநாள் தொடரும் நியூசிலாந்து வசம்!

## உலக கிண்ண நேரடி தகுதியை இழந்தது

ஹமில்டன், ஏப். 01

இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் 6 விக்கெட்களால் தோல்வியடைந்துள்ளது இலங்கை அணி. இதனால், ஒருநாள் உலகக் கிண்ணத்துக்கு நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை முற்றாக இழந்தது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அங்கு, டெஸ்ட் தொடரில் 2 - 0 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்தது. இதைத் தொடர்ந்து நடந்த ஒருநாள் போட்டியில், முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. இந்த நிலையில், நேற்று மூன்றாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டி ஒருநாள் உலகக் கிண்ணத்துக்கு நேரடியாக தகுதி பெறுவதை தீர்மானிக்கும் போட்டி இது என்பதால் வென்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை அணி களமிறங்கியது.

ஹமில்டன் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடியது.

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் இலங்கை அணி 41.3 ஓவரிலேயே 157 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதில், தொடக்க வீரர் பதும் நிஸங்க மட்டுமே சிறப்பாக துடுப்பெடுத்தாடி 57 ஓட்டங்களை எடுத்தார். தசூன் சானக 31, சாமிக கருணாரத்ன 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூசிலாந்து சார்பில் மட் ஹென்றி, ஹென்றி ஷிப்லே, டார்ல் மிட்சேல் ஆகியோர் தலா 3 விக்கெட்களை எடுத்தனர்.



இதைத் தொடர்ந்து களமிறங்கிய நியூசிலாந்து அணி 59 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது. ஆனால், வில் யங் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்கள் குவித்து வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில், 32.5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்த நியூசிலாந்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் போட்டியை வென்று 2- 0 (3) என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில், இந்தியாவில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை இலங்கை இழந்தது.

தற்போது 2023 ஒருநாள் போட்டி சுப்பர் லீக் புள்ளி பட்டியலில் 9ஆவது இடத்தை பிடித்தது. இதனால் இந்தியாவில் நடைபெறும் 2023 உலகக் கிண்ணத்துக்கு இலங்கை அணி நேரடியாகத் தகுதி பெறும் வாய்ப்பை அதிகாரபூர்வமாக இழந்துள்ளது.

இதனால், இலங்கை தகுதிப் போட்டியில் மோதியே உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற வேண்டும்.

(ஐ)



### மியாமி ஓப்பன் ரென்னிஸ்:

# மெத்வதேவ், சின்னர் அரையிறுதிக்கு தகுதி

மியாமி, ஏப். 01

மியாமி ஓப்பன் ரென்னிஸின் அரையிறுதி ஆட்டங்களுக்கு மெத்வதேவ், சின்னர் ஆகியோர் முன்னேறினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்ய வீரர் டேனில் மெத்வதேவ், அமெரிக்காவின் கிறிஸ்டோபர் யூபாங்க்ஸ் உடன் மோதினார்.

இந்த போட்டியில் மெத்வதேவ் 6-3, 7-5 என்ற செற் கணக்கில் கிறிஸ்டோபரை எளிதில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், பின்லாந்து வீரர் எமில் ருசோவுரியுடன் மோதினார். இந்த போட்டியில் சின்னர் 6-3, 6-1 என்ற செற் கணக்கில் எமிலை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்

# பங்களாதேஷுடனான தொடர் அயர்லாந்து ஆறுதல் வெற்றி!

டாக்கா, ஏப். 01

பங்களாதேஷுக்கு எதிரான இருபது - 20 தொடரின் இறுதிப் போட்டியில் அயர்லாந்து ஆறுதல் வெற்றி பெற்றது. எனினும், தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் அயர்லாந்து கிரிக்கெட் அணி முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் இழந்தது.



இதையடுத்து இந்த இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் முதல் இரு ஆட்டங்களில் அயர்லாந்து வெற்றி பெற்று தொடரி ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இந்நிலையில், இந்த இரு அணிகள் இடையிலான 3ஆவது இருபது - 20 போட்டி சட்டோகிராமில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அயர்லாந்து அணியின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து தடுமாறியது.

முதல் இரு இருபது - 20 போட்டிகளில் அதிரடி காட்டிய பங்களாதேஷில் இந்த ஆட்டத்தில் ஜொலிக்க தவறினர். அந்த அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக ஷமிம் ஹொசைன் 51 ஓட்டங்கள் எடுத்தார்.

அயர்லாந்து தரப்பில் மார்க் அடெய்ர் 3 விக்கெட்டும், மத்தியு 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து 125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களம் புகுந்தது.

அந்த அணியின் தலைவர் போல் ஸ்டிர்லிங் அதிரடியில் மிரட்டினார். அவர் 41 பந்துகளில் 77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் அந்த 14 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 126 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் வெற்றி பெற்றாலும் முதல் இரு போட்டிகளில் பங்களாதேஷ் அணி வென்றதால் 2-1 என்ற கணக்கில் பங்ளாதேஷ் தொடரை கைப்பற்றியது.

# பும்ராவுக்கு மாற்றுவீரரை மும்பை அணி அறிவித்தது!

மும்பை, ஏப். 01


மும்பை இந்தியன்ஸ் அணி பும்ராவுக்கு பதிலாக மாற்று வீரராக சந்தீப் வாரியரை அறிவித்துள்ளது.

ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் 16ஆவது தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தப் போட்டி எதிர்வரும் மே 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் காயம் காரணமாக இந்த ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகிய மும்பை அணி வீரர் பும்ராவுக்கு பதிலாக மாற்று வீரரை அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி வேகப்பந்துவீச்சாளார் சந்தீப் வாரியர் மும்பை அணியில் இணைந்துள்ளார். 50 இலட்சம் இந்திய ரூபாய்க்கு அவர் அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

மும்பை அணி தனது தொடக்க ஆட்டத்தில் பெங்களூரை நாளை ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறது.





# மியாமி ஓப்பன் ரென்னிஸ் ரைபகினா இறுதிக்கு தகுதி

மியாமி, ஏப். 01

மியாமி ஓப்பன் ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு எலனா ரைபகினா முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் பிரபல தொடர்களில் ஒன்றான மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இந்தத் தொடரில் நேற்று பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் எலனா ரைபகினா (கஜகஸ்தான்) - ஜெசிகா பெகுலா (அமெரிக்கா) மோதினார்கள்.

இதில் எலனா ரைபகினா 7-6 (7-3), 6-4 என்ற செற் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

நேற்று நடந்த கடைசி காலிறுதி போட்டியில் பெட்ரோ குவிடோவா (செக் குடியரசு) - அலெக் சான்ட்ரோவா (ரஷ்யா) மோதினர். இதில் குவிடோவா 6-4, 3-6, 6-3 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினர். (ஐ)

# 40 ஆயிரம் நுகர்வோருக்கு நீர் விநியோகம் துண்டிப்பு

## தேசிய நீர் வழங்கல் சபை

கொழும்பு, ஏப். 01

**பல மாதங்களாக நீர் கட்டணத்தை செலுத்தத் தவறிய 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுகர்வோருக்கான தண்ணீர் விநியோகத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை துண்டித்துள்ளது.**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், நிலுவைத் தொகை ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது என்றார்.

இதேவேளை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது உள்நாட்டு நுகர்வோர், வணிகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் உட்பட 15 ஆயிரம் பேர் மீது வழக்குகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செப்ரெம்பர் 2022இல் கட்டண அதிகரிப்புக்கு பின்னர் நீர் கட்டண தீர்வு விகிதம் 40 வீதம் குறைந்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை சுமார் 8 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயாகும். இதனால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தற்போது கடுமையான நிதி சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்தவின் கருத்துக்கு அரசுக்குள் மதிப்பில்லை!

## டிலான் பெரேரா எம். பி.

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கு அரசாங்கத்துக்குள் எவ்வித மதிப்பும் தற்போது கிடையாது. பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய நாங்கள் இனியொருபோதும் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைய போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி பணிமனையில் நடத்திய செய்தியளார் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை எந்த தேர்தலையும் நடத்த இடமளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி செயல்படுகிறார். அரசாங்கத்தின் தேவைக்கு அமைய தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது, ஜனாதிபதி தேர்தலை காண்பித்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தாமலிருக்க இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல் உரிமையை பெற்றுக் கொள்ள அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட வேண்டும். தேர்தல் செயல்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளுக்கு தீர்வு கானும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக வலுவான தடை ஏற்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. ஆகவே தற்போதைய நிலையில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

# ரூபாயிலான கடனையும் மறுசீரமைக்க நடவடிக்கை

## இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஏப். 01

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இலங்கை ரூபாயிலான கடனையும் உள்ளடக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி விருப்பம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கடன் வழங்குநர்களின் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை பெறுவதற்கான முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக இதனை கருதி மத்திய வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இலங்கை மத்திய வங்கியிடம் காணப்படுகின்ற திறைசேரி உண்டியல்கள் மாத்திரமே பரிசீலிக்கப்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தன ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கமும் அதன் ஆலோசகர்களும் பிரதான திறைசேரி பத்திரங்களை வைத்திருப்பவர்களுடன் ஆலோசனைகளை நடத்துவார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மொத்த திறைசேரி உண்டியல் பங்குகளில் மத்திய வங்கி 62.4 சதவீதத்தை வைத்திருக்கிறது.

இந்தநிலையில் 2023 மே மாதத்துக்குள் உள்நாட்டுக் கடன் மேம்படுத்தலையும் செப்ரெம்பர் 2023இற்குள் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பையும் முடிக்க தாம் உத்தேசித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறியுள்ளார்.

# மூன்றில் ஒருவர் சோம்பேறிகளாம்!

## மருத்துவ நிபுணர் ஷெரின்

கொழும்பு, ஏப். 01

நாட்டில் சோம்பேறிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார துறையின் தொற்றா நோய் பிரிவின் சமூக விசேட மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் தெரிவித்தார்.

மூன்று பேரில் ஒருவர் சோம்பேறியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மடிக்கணினி பாவனை, தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம், கைத்தொலைபேசிக்கு அடிமையாதல் போன்ற காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனால், இதய நோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்றவை ஏற்படும் அபாயம் உள்ளது. அத்துடன், தினமும் உடற்பயிற்சி செய்ய ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதன் மூலம் பல நோய்களைத் தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 3 உணவகங்கள், வெதுப்பகம் யாழ்ப்பாணம் மாநகரில் 'சீல்'



யாழ்ப்பாணம், ஏப். 01

உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர பகுதியில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 3 உணவகங்கள், ஒரு வெதுப்பகம் என்பன 'சீல்' வைத்து மூடப்பட்டன.

இதேசமயம், காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 11 வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொழும்புத்துறை, யாழ். நகரம், வண்ணார்பண்ணை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரிசோதனையில் கொழும்புத்துறையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம் மற்றும் மூன்று உணவகங்கள் இனங்காணப்பட்டன.

இவற்றுக்கு எதிராக சுகாதார பரிசோதகர்கள் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்குகளின் விசாரணை முடிவில் 15 வர்த்தகர்களுக்கும் 4 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், மூன்று உணவகங்களையும் வெதுப்பகத்தையும் சீல் வைத்து மூடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-03)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 8 வீதம் குறைப்பு!

கொழும்பு, ஏப். 01

கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் சேவைக் கட்டணத்தை 8 சதவீதத்தால் குறைத்துள்ளதாக யுனைடெட் லங்கா அறிவித்துள்ளது.

எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

இந்த சேவைக் கட்டண குறைப்பு போக்குவரத்து மற்றும் தளபாடத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்மையளிக்கும். அத்துடன், வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஒட்டுமொத்த போக்குவரத்து செலவுகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# தமிழ் அரசியல் கைதிக்கு கடுங்காவல் ஆயுள் சிறை!

கொழும்பு, ஏப். 01

2008ஆம் ஆண்டு கொழும்பின் மட்டக்குளியில் இருந்து மொறட்டுவை நோக்கி பயணித்த பேருந்தில் வெடிகுண்டை வெடிக்க வைக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதானவருக்கு கடுங்காவல் ஆயுள் தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

வழக்கின் இரண்டாவது குற்றவாளி, விசாரணையின் தொடக்கத்திலிருந்து நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. குற்றவியல் நடைமுறையின் 241ஆவது பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது. அவருக்கு கடுங்காவல் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. அத்துடன், அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

நீண்ட விசாரணையின் பின்னர், சந்தேகத்துக்கு இடமின்றி குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு நிரூபித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க குறிப்பிட்டார்.

இதன்படி குற்றம் சாட்டப்பட்ட நாகலிங்கம் நடனசேகரம் மற்றும் தர்மலிங்கம் ஜெயந்த ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடுங்காவலுடன் கூடிய ஆயுள் தண்டனை விதித்தது. (ஐ)

## பொது நிர்வாக...

திகதி முதல் அமுலாகும் வகையில் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்துகொண்ட கே.டி. என். ரஞ்சித் அசோக, இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி ஆவார்.

இதற்கு முன்னர் அவர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளராக கடமையாற்றியிருந்தார். (அ)

## தந்தையே...

சடலம் கண்டெடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கை சேர்ந்த கொலையான நபர் கரம்பகத்தில் திருமணம் செய்து வசித்து வந்தார். குடும்ப பிணக்கு காரணமாக இரு வருடங்களின் முன்னரே அவரின் மனைவி பிரிந்து சென்றுவிட்டார். இந் நிலையில், அவர்களின் பிள்ளைகள் இருவரும், அம்மம்மாவின் பராமரிப்பில் வளர்ந்தனர். எனினும், தந்தை பிள்ளை களை பார்க்க வீட்டுக்கு செல்வது குறைவு என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று காலை கொல்லப்பட்டவரின் 19 வயதான மூத்த மகன் கையில் வெட்டுக் காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தந்தை வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், மகனின் கையில் இருந்த காயம் விசாரணை நடத்திய பொலிஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதனால், அவரிடம் கையில் எவ்வாறு வெட்டுக் காயம் வந்தது என்று வினவினர்.

அதற்கு அவர், நேற்று நள்ளிரவு அடையாளம் தெரியாத சிலர் வீட்டுக்கு வந்து தந்தை தங்கியிருக்கும் இடத்தை காட்டுமாறு தன்னை அழைத்துச் சென்றனர் என்றும் தந்தை தங்கியிருந்த கொட்டிலுக்கு அண்மையாக வந்ததும் அவர்கள் தம்மை வெட்டினர் என்றும் தாம் அங்கிருந்து தப்பியோடி விட்டார் எனவும் கூறியுள்ளார். அத்துடன், அவர்கள் தந்தையை வெட்டிக் கொன்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி ஏன் பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை என்று கேட்டதற்று, காலையில் பொலிஸார் விடயத்தை அறிந்து வருவார்கள் என்று நம்பியதாகவும் கூறியுள்ளார்.

காயமடைந்தவருடன் இருந்த அவரின் நண்பர் மற்றும் காயத்துக்கு இலக்கானவரின் சகோதரனையும் பொலிஸார் விசாரித்தபோது மர்மம் வெளியானது.

நேற்று வெள்ளிக்கிழமை நடுச்சாமம் 1.30 மணியளவில் தானும், சகோதரனும், அவரின் நண்பரும் (மருத்துவமனையில் துணையாக தங்கி நின்றவர்) தந்தை தங்கியிருந்த குடிலுக்கு சென்று அவரை வெட்டிக் கொன்றனர் என்று பொலிஸாருக்கு மகன் ஒருவர் வாக்கு மூலம் அளித்தார்.

மேலும், வீட்டிலிருந்து 3 கிலோமீற்ற தொலைவிலுள்ள தோட்டக் கொட்டிலுக்கு நடந்து சென்று, இரகசியமாக 19 வயதான மூத்த மகனே தந்தையை முதலாவதாக வெட்டியுள்ளாார். தந்தையின் கழுத்தில் வெட்டுக்காயம் ஏற்பட தந்தை படுக்கையிலிருந்து எழுந்துள்ளார். இதன் போது தம்பியாரும் வெட்டினார். அவர் வெட்டும்போது, தவறுதலாக அண்ணனின் கையிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பின்னர், மூவரும் சேர்ந்து அவரை கழுத்து, முகம், நெஞ்சு, கை எனப் பல பகுதிகளிலும் வெட்டிக் கொன்றதாகக் கூறினர். தந்தை தம்மை கொடுமைப் படுத்துவதால் அவரைத் தாங்கள் கொன்றனர் என்று பிள்ளைகள் இருவரும் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித் துள்ளனர்.

இதையடுத்து, மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கத்திகளை அருகில் இருந்த குளத்தில் வீசப்பட்ட நிலையில் அவை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தக் கொலை தொடர்பில் அதிகாலை 5 மணிக்கு பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து காலை 9 மணியளவி லேயே கொலை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02-03)

## பயங்கரவாத...

இருந்த சட்டத்தைவிட 10 மடங்கு பயங்கரமானது.

பேரணி சென்றால் அதனை பயங்கரவாத செயல் ஆக்கலாம். நபரகள் கைது செய்யப்படலாம். அது தொடர்பான செய்திகளை வெளியிட்டால் அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதி பொலிஸ்மா அதிபருக்கு தடுப்பு உத்தரவை வழங்கலாம். அதனை சவாலுக்குட்படுத்த முடியாது.

இந்த சட்டமூலத்துக்கு எதிராக நாம் நீதிமன்றத்தை நாடுவோம். இருந்த சட்டமூலம் பயங்கரமானது என்பதால் தான் அதை நீக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால் இருந்ததை விடவும் மோசமான சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. - என்றார். (அ)

## குடியியல்...

ஏராளமான மீறல்களை நிவர்த்தி செய்வதற் கும் அதன் பரிந்துரைகளை தாமதமின்றி செயல்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கு மாறும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் நாட்டின் ஆறாவது கால கட்ட அறிக்கையை மதிப்பாய்வு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு அதன் இறுதி அவதானிப்புகளை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அரசாங்கம் கவனிக்க வேண்டிய மூன்று முன்னுரிமைப் பிரச்னைகளை மனித உரிமைகள் பேரவை அடையாளம் கண்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவனவே அந்த மூன்று முன்னுரிமை பிரச்னைகளாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவைப் பொறுத்தவரை அந்த அமைப்பு பாரிஸ் கோட்பாடுகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்யவும் அதன் உறுப்பினர்களின் நிய மன செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதிப் படுத்தவும் அதன் ஆணையை அனைத்துப் பகுதிகளிலும் திறம்படவும்- சுதந்திரமாகவும் செயல்படுத்த போதுமான ஆதாரங் களை வழங்குமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பயங்கர வாத தடுப்பு சட்டத்தின் மூலம் 12 மாதங்கள் வரை குற்றஞ்சாட்டப் படாமல் நீண்ட கால விசாரணைக் காவல் சிறுபான்மையினர் குறிப்பாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள், அரசாங்க விமர்சகர்கள், ஓரினச் சேர்க் கையாளர்கள் மீதான அடக்குறை மற்றும் சித்திரவதை மூலம் ஒப்புதல் மூலங்களைப் பெறுதல் நிறுத்தப்படல் வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்து செய்து பயங்கரவாதத்தின் குறுகிய வரையறையை உள்ளடக்கிய சட்டத்தை கொண்டு வர வேண்டும். அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமைகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்பது போன்ற பிரச்னைகளும் மனித உரிமைகள் குழுவால் அடையாளம் காணப்பட்ட சில பிரச்னைகளையும் அது தொடர்பான பரிந்துரைகளையும் மனித உரிமைகள் பேரவை செய்துள்ளது.

இதேவேளை நிதிப் பற்றாக்குறையின் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப் படுவது குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் திட்டமிடப் பட்ட உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை பரிந்து ரைத்துள்ளது. (ஐ)

# மின் கட்டணத்தை 20 வீதம் குறைக்கலாம்!

## ஜானக ரத்நாயக்க

கொழும்பு, ஏப். 01

எரிபொருள் விலை குறைப்புக்கு அமைய மின்சார கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைக்க முடியும், ஆகவே மின்கட்டணத்தை திருத்தம் செய்வது தொடர்பான திட்டத்தை முன்வைக்குமாறு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இலங்கை மின்சார சபையிடம் வலியுறுத்தியுள்ளார்.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைக்கு அமைய மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மின் பாவனையாளர்களால் ஏற்றுக்கொள்ள கூடிய நியாயமான முறையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என மின்பாவனைகள் தொடர்பான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் சட்டத்துக்கு முரணான வகையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றம் சிறந்த ஒரு தீர்மானத்தை அறிவிக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் இலங்கை மின்சார சபை செயற்படுவது முறையற்றது.

எரிபொருள் விலை குறைப்புக்கு அமைய மின் கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைக்க முடியும், ஆகவே மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான திட்டத்தை முன்வைக்குமாறு மின்சார சபையிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

## சுமந்திரன்...

எனவே, சுமந்திரன் சொன்னதைக் காப்பாற்ற வேண்டும் - என்று கூறியருக்கிறார் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

யூ-ரியூப் தொலைக்காட்சி சனல் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த நேர்காணலில் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் அவர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

“2020 தேர்தல் முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர்கள் என்னைக் கேட்ட போது, எல்லோரும் விருப்பப்பட்டு வந்தால் கட்சி தலைமையை ஏற்க நான் தயார் என்று கூறினேன். மறுநாள் “நண்பர் சிறீதரனுக்கு என்னுடைய பூரண ஆதரவு இருக்கும்”, என்று சுமந்திரன் கூறினார்.

நான் கருத்து மாறமாட்டேன். நான் அன்று (பாராளுமன்ற தேர்தல் சமயத்தில் சுமந்திரனுக்கு ஆதரவளித்தமை) சொன்னதைக் காப்பாற்றினேன். எனவே, சுமந்திரன் சொன்னதைக் காப்பாற்ற வேண்டும். நான் என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தேன். அதற்கு சுமந்திரன் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருந்தார்.

பின்னர், ஓரிடத்தில் அவர் அளித்த பேட்டியின்போது, “எனக்கு (சுமந்திரன்) தலைமைத்துவம் வகிக்கும் தகுதி இல்லை. நான் இராஜதந்திர - அரசியல் நடவடிக்கைகளை கையாளுவேன். கட்சிக்கு தலைமைத்துவத்தை இன்னொருவரே வழங்க வேண்டும் என்றார். அது சரியானது. அவரிடம் உள்ள சட்டப் புலமை, மொழிப்புலமை, அவரின் இராஜதந்திரத் தொடர்புகள் எமக்கு தேவை.

தலைமைத்துவம் என்பது வேறு ஒரு பக்கம், கட்சியின் அடிமட்டத் தொண்டனிலிருந்து மக்கள் மனங்களை அறிந்து - எண்ணங்களை புரிந்து கட்சியின் தலைமைத்துவத்தை வழிநடத்தி கட்சியை மேலமட்டம் வரை கட்டிக் கொண்டு வருவது என்பது அது ஒரு வகையான தலைமைத்துவம். நான் அதை செய்வேன் என்ற தற்துணிவும் - தைரியமும் எனக்கு இருக்கின்றது. அதற்கு தயாராக இருக்கிறேன்.

ஆனால், சுமந்திரன் இதற்கு போட்டியாவார் என்றால் நான் அவரை எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன் - என்றார். (ஐ)

## கோட்டாவின்...

பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் 31, 2022 அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டத்தின் ஒரு வருட பூர்த் தியை முன்னிட்டு நேற்று போராட்டம் நடத்தப்பட லாம் என வெளியான தகவல்களை அடுத்தே இவ்வாறு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டதாகக் கூறப்படடது. (அ)

## புதிய...

- என்று கூறியிருக்கிறார் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா.

பூநகரி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “புதிதாக உருவாக்கப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டமானது நாட்டின் பாதுகாப்பை அடிப் படையாகக் கொண்டு, அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டமாகவே இருக்கும். இதுதொடர்பான சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பித்து வாதப் பிரதிவாதங்களின் பின்னரே சட்டமாக அறிவிக்கப்படும். எனவே, குறித்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக மக்கள் குழப்பமடைய தேவையில்லை”, என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## மெட்டுக் கட்சியின்...

வெற்றிபெறும்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் பொதுஜன பெரமுனவே வெற்றியடைந்து ஆட்சியமைக்கும்.

தற்போது குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். அவர்களின் அந்த முயற்சி பயனற்றது.

மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிரணிப் பக்கம் சென்றாலும் பாராளுமன்றத்தில் தற்போது மொட்டுக் கட்சி பெரும்பான்மையை இழக்கவில்லை.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலும் மொட்டுக் கட்சியே வெற்றிவாகை சூடும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அரசமைப்பு பேரவை இன்று கூடுகின்றது!

கொழும்பு, ஏப். 01

அரசமைப்பு பேரவையின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

சபையின் உறுப்பினர்கள் சுயேச்சையான அமைப்புகளுக்கான உறுப்பினர்களை நியமிப்பது மற்றும் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கூட்டத்தின் போது ஆலோசிக்கப்படவுள்ளது. (ஐ)

# குழுவினரால் ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 01

முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாத சிலர் ஒருவரை கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று மட்டக்குளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு - மட்டக்குளி - களனி கங்கை மோல வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 39 வயதுடைய மொஹமட் சுதுர் மொஹமட் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரின் வீட்டின் முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயங்களுக்கு இலக்கானவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (ஐ)

# முட்டைக்கான தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக்கூடும்

கொழும்பு, ஏப். 01

இறக்குமதி மூலம் சந்தையில் முட்டைக்கான தட்டுப்பாடு அதிகரிக்கக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் நிஷாந்த அப்புஹாமி இதனைத் தெரிவித்துள்ளார்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்ற நிலையில், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை அந்தத் தொகைக்கு சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்கள் தாய் கோழிகளை முட்டை உற்பத்திக்காக பயன்படுத்தாது இறைச்சிக்காக விற்பனை செய்யும் வர்த்தகத்தில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இதன் காரணமாக முட்டைக்கான தட்டுப்பாடு வலுவடையக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்காலத்தில் மேலும் ஒரு தொகுதி முட்டைகள் நாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அரச வணிக பல்சார் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒரு கோடி முட்டைகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு குறைவடையக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபைகள் தேர்தலை கட்டம் கட்டமாகவேனும் நடத்துக

## தேர்தல் ஆணைக்குழு முன்னாள் தலைவர்

கொழும்பு, ஏப். 01

**தேர்தல் இல்லை என்பது ஜனநாயகம் இல்லை என்பதையே குறிக்கும். எனவே, நிதி நெருக்கடி தொடர்ந்தும் காணப்படுமானால் அதனை முகாமைத்துவம் செய்து , கட்டம் கட்டமாகவேனும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

நாட்டில் தற்போதுள்ள நிலைமைக்கு அமைய ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தலை நடத்த முடியாது என்பது தெளிவாகியுள்ளது. உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாமையானது குற்றமாகும் என்பதோடு, கவலைக்குரியதுமாகும்.

இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்ப்பது என்பதே தற்போதுள்ள பிரச்னையாகும். தேர்தல் ஆணைக்குழு , நிதி அமைச்சு மற்றும் திறைசேரி என்பவற்றுக்கே இந்த பிரச்னையை தீர்ப்பதற்கான இயலுமை காணப்படுகிறது. மாறாக வேறு எவராலும் இதற்கான தீர்வை வழங்க முடியாது.

நிதியை சேகரித்து தேர்தலை நடத்த முடியாதெனில், கட்டம் கட்டமாகவேனும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இன்று நாட்டில் சகல மாவட்டங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். மாகாண சபைகளும் இல்லை உள்ளூராட்சிமன்றங்களும் இல்லை.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இல்லை என்பது முக்கிய பிரச்னையாகும். மாகாண சபை ஆளுநர்கள் மற்றும் செயலாளர்களே இவற்றை ஆட்சி செய்கின்றனர். இந்த நிலைமையை விரைவில் மாற்றுவதற்காக அரசாங்கம் , பாராளுமன்றம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பன இணைந்து செயல்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தேர்தல் நடத்தப்படாமையால் பிரதிநிதித்துவ ஜனநாயகம் அற்றுப்போகும் அபாயம் உள்ளது. தேர்தல் இல்லை என்பது ஜனநாயகம் இல்லை என்பதையே குறிக்கிறது. எனவே, குறைந்தபட்சம் ஓகஸ்டில் உலக இளைஞர் தினத்திற்கு முன்னதாக அல்லது செப்ரெம்பரில் உலக ஜனநாயக தினத்துக்கு முன்னதாகவேனும் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

# இலங்கையுடன் தொடர்புடைய சிம்பாப்வே இராஜதந்திரி கைது!



ஹராரே, ஏப். 01

இராஜதந்திர பதவியை பயன்படுத்தி தங்கம் கடத்திய குற்றச்சாட்டில் சிம்பாப்வேயின் மிகவும் செல்வாக்கு மிக்க இராஜதந்திரிகளில் ஒருவரான யூபெர்ட் ஏஞ்சலின் இராஜதந்திர அந்தஸ்து பறிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யூபெர்ட் ஏஞ்சல், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கான சிம்பாப்வேயின் தூதராக அந்த நாட்டின் ஜனாதிபதி மங்கக்வாவால் நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையிலேயே அவர் தங்கம் கடத்தினார் என்று அல் ஜசீரா அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தது. எனினும், தம்மீதான குற்றச்சாட்டை யூபெர்ட் ஏஞ்சல் அண்மையில் மறுத்திருந்தார்.

இலங்கையின் மத போதகரான ஏஞ்சல் நபி ஜெரோம் பெர்னாண்டோவுடன் உறவைப் பேணி வந்த அவர் 2020 மற்றும் 2022இல் இலங்கைக்கு வந்திருந்தார். இதன்போது அவர் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்தார்.

இதேவேளை அவர் சிறைக்கு செல்லக்கூடும் என்று சிம்பாப்வே முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உரங்களின் விலையை மேலும் குறைக்க முடிவு

கொழும்பு, பெப். 01

உர விலையை மேலும் குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கமைய, அரசுக்கு சொந்தமான உர நிறுவனங்களில் தற்போது 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்ற யூரியா உர மூடைக்கான விலையும் குறைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அரச உர நிறுவனங்களில் தற்போது 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்ற 'பண்டி' (BANDY) உர மூடைக்கான விலையும் இதன் மூலம் குறைக்கப்படும். தற்போது ஒரு மூடை யூரியா உரத்தின் விலையை 11 ஆயிரம் ரூபாயாக தனியார் விற்பனையாளர்கள் குறைத்துள்ளனர்.

இதேபோல, ஒரு மூடை 'பண்டி' உரத்தை 19 ஆயிரம் ரூபாய்க்கு தனியார் விற்பனையாளர்கள் விற்பனை செய்கின்றனர். (ஐ)

# விபத்தின்போது வீட்டின் கூரைக்கு தூக்கி வீசப்பட்ட நபர் படுகாயம்!

கொழும்பு, ஏப். 01

காரும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் இருந்தவர் அங்கிருந்த வீடு ஒன்றின் கூரைக்கு மேல் தூக்கி வீசப்பட்டார் என்று ஹொரண பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளும் காரும் ஒன்றுடன் ஒன்று மோதியவுடன் தீப்பற்றி எரிந்தது. ஹொரணை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும், பிரதேசவாசிகளும் இணைந்து தீயை அணைத்தனர்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து சென்றவர் சுமார் பதினைந்து மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டு எதிர்திசையில் உள்ள வீடொன்றின் கூரையில் விழுந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் கம்பி வேலிக்கு மேலாக தூக்கி வீசப்பட்டு அருகில் உள்ள தோட்டத்தில் விழுந்தார்

வளைவான பகுதியில் எதிர் எதிர்திசையில் வந்த காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. பிரதேசவாசிகள் காயப்பட்டவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

# 23,974 பேர் வெளியேறினர்!

கொழும்பு, ஏப். 01

கடந்த பெப்ரவரி மாதத்தில் 23 ஆயிரத்து 974 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 7 ஆயிரத்து 662 தொழிலாளர்கள் மற்றும் 6,939 பேர் வீட்டுப் பணிகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இக்காலப் பகுதியில் மொத்தம் 6,582 திறமையான தொழிலாளர்களும் வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.